விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 19 செவ்வாய்க்கிழமை (04.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழ்நாடு செல்வதை தவிர்க்க இலங்கை அரசு கோரிக்கை

## இலங்கையர்களுக்கு அச்சுறுத்தலாம்

(கொழும்பு)

இலங்கை மக்கள் மறு அறிவித்தல் வரும்வரை தமிழ் நாட்டுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது. இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு செல்வதில் பிரச்சினையொன்றும் இல்லை என்று அரசாங்கம் கூறியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அமைதியை உறுதிப்படுத்துவதே நோக்கம்

### அமெரிக்கா தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் இனிமேல் எத்தகைய தவறுகளும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும், அமைதியை உறுதி செய்வதுமே அமெரிக்கா வின் நோக்கம் என்று சென்னையில் உள்ள அமெரிக்காவின் துணைத் தூதுவர் ஜெனிபர் ஏ மக்லின்ரைர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்குப் பின்னர், அந்தப் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை திருப்ப ஆஸி மறுப்பு

(மெல்போர்ன்)

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு வரும் தஞ்சக் கோரிக்கையாளர்கள் அனைவரையும் இலங்கைக்கே திருப்பி அனுப்பி விட வேண்டும் என்று அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியினர் கூறியிருப்பதை அந்த நாட்டின் அரசாங்கமும், அகதிகளுக்காக குரல் கொடுப்பவர்களும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்கள்.

இலங்கை அகதிகள் அவுஸ்திரேலிய சட்ட முறைமைக்குள் வருவதற்கு முன்னதாகவே, அவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு ஏதுவாக, இலங்கை அரசாங்கத்துடன் அவுஸ்திரேலியா ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சிக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

பல இலங்கைத் தஞ்சக் கோரிக்கையாளர்கள், பொருளாதார நோக்கில் குடியேறுபவர்கள்தான், அவர்கள் அகதிகள் அல்ல என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரான ஜூலிபிசப் கூறியுள்ளார்.

இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தஞ்சம் வழங்கினால், இலங்கை அரசாங்கம் தனது சொந்த மக்களையே துன்புறுத்துகிறது என்றுதான் பொருள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தஞ்சக் கோரிக்கைகளை ஐ.நாவின் அகதிகளுக்கான சாசனத்தின் அடிப்படையில் கையாள வேண்டிய கடப்பாடு அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சரான கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் கோல் கம்பத்தை நகர்த்துகிறார்கள் என்றும், எதிர்க்கட்சிகள் இப்படி கேட்பது வினோதமாக இருக்கிறது என்றும், அவர்கள் ஐ.நாவின் அகதி (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் வருகைக்கு தி.மு.கவும் எதிர்ப்பு கலைஞர் தெரிவிப்பு

(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று தி.மு.க தலைமையகத்தில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு, (20ஆம் பக்கம் பார்க்க)

## முன்னறிவித்தல் எதுவுமின்றி யாழ். வந்தார் சந்திரிகா!



(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று யாழ்ப்பாணத் திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவரின் யாழ் விஜயம் எவ்வித முன்னறி வித்தலும் இன்றி இரகசியமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் யாழ்.விஜயம் குறித்து தம்மிடம் கூட எதுவும் தெரிவிக்கப்பட வில்லை என பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் (19ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிகமாக 4,928 மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கலாம்

### உயர் நீதிமன்றம் சிபார்சு

(கொழும்பு)

இஸட் புள்ளி விவகாரம் தொடர்பாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு முன் மொழிவுகளில் மூன்றாவது முன்மொழிவை உயர் நீதிமன்றம் நேற்று சிபார்சு செய்தது.

இந்த மூன்றாவது முன்மொழிவானது, பல்கலைக்கழக மானியங்களுக்கு ஏற்கெனவே அனுமதிக்கத் தீர்மானித்திருந்த மாணவர் தொகையைவிட 4 ஆயிரத்து 928 பேரை மேலதிகமாக சேர்த்துக் கொள்வதற்கு வகை செய்வதாகும்.

பிரதம நீதியரசர் ஷிரானி ஏ.பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என்.ஜி.அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகியோர் நீதியரசர்கள் குழாமில் காணப்பட்டனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின்னர் அமைச்சரவை மாறும்?

(கொழும்பு)

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சுக்களுக்கான துறைகள் தொடர்பான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (19ஆம் பக்கம் பார்க்க)

## அசோக் கே.காந்தாவுக்கு சேவை நீடிப்பு; அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது இந்தியா

### கொழும்பு ஊடகம் விபரிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுடன் சுமுகமான உறவைக் கொண்டிராத இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவுக்கு, இந்திய மத்திய அரசு ஆறு மாத சேவை நீடிப்பை வழங்கி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது.

இந்தியாவின் இந்த அறிவிப்பு அசோக் கே.காந்தாவையடுத்து பதவியேற்கும் புதிய தூதுவர் மூலம் [illegible] திட்டமிட்டிருந்த இலங்கை அரசின் முகத்தில் ராஜதந்திர ரீதியாக கொடுக்கப்பட்ட அறை என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவின் பதவிக்காலம் அடுத்த மாதத்துடன் முடிவடையவிருந்தது. இதனால் சற்று நிம்மதியடைந்த இலங்கை அரசு புதிதாக வரும் தூதுவர் மூலம் சுமுகமான உறவை கட்டியெழுப்பும் எதிர்பார்ப்பில் இருந்தது.


ஆனால், இலங்கை அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனவாத அரசியல் இனியும் வேண்டாம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



இனவாத, குறுகிய அரசியல் இனி வேண்டாம். எமது உறவை இல்லாமல் செய்ய சிலர் மதவாதம், இனவாதம் பேசுகின்றனர். ஆனாலும் எமது உறவு சகோதர பாசம் அன்று போல் என்றும் உறுதியாக இருக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வெபர் மைதானத்தில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மூன்று வருடத்திலும் உள்ள வித்தியாசத்தை பாருங்கள். இன்னும் இன்னும் இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திகள் இடம்பெறும்.

இங்கு வாழும் மக்கள் அனைவரும் அன்றும் இன்றும் எமது சகோதரர்கள் போல உள்ளனர். இந்த நாட்டில் வாழும் நாங்கள் அனைவரும் ஒரே தாய் மக்கள்.

இனபேதம், மதபேதம், குலபேதம் எதுவும் இங்கில்லை. இன்று உள்ளது போல் நீங்கள் என்றும் வாழவேண்டும். இனவாத குறுகிய அரசியல் இனி வேண்டாம். எமது உறவை இல்லாமல் செய்ய சிலர் மதவாதம், இனவாதம் பேசுகின்றனர்.

ஆனாலும் எமது உறவு சகோதர பாசம் அன்று போல் என்றும் உறுதியாக இருக்கும். நீங்கள் அனைவரும் எம்மோடு வந்து சேருங்கள்.

அன்று பட்டதாரிகள் துப்பாக்கி ஏந்தி போராடினார்கள். ஆனால் இன்று பட்டதாரிகளின் கைகளில் வேலைவாய்ப்புக்கள் வசதிகள். அன்று எதிர்கால நம்பிக்கை இருக்கவில்லை. இன்று அந்த நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

இனவாத அரசியல் மிகவும் மோசமானது. எமக்குத் தேவை சகோதர பாசமாகும். உங்களுடைய மாகாணம் முன்னேறுவதற்காக நாம் பல மில்லியன் ரூபாய் செலவு செய்திருக்கின்றோம். இன்னும் வசதிகள் வழங்குவோம். இங்குள்ள கிராமங்களுக்குள்ளே பாரிய வசதிகளை மாகாணசபைகளின் மூலம் வழங்குவேன். இதை யாரும் ஒன்றும் செய்து விடமுடியாது.தற்போது உல்லாசப் பயணிகளின் வரவு அதிகரித்துள்ளது. பாசிக்குடா போன்ற அழகிய சூழல் எல்லாம் உங்கள் பகுதியில் உள்ளபோது உங்கள் பகுதி இளைஞர்கள் வேலைவாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

கல்லடிப் பாலம், சர்வதேச விளையாட்டரங்கு, விமான நிலையம் போன்ற வேலைத் திட்டங்களை விரைவில் முடிப்போம். பள்ளிவாசல்கள், கோயில்கள், தேவாலயங்கள், விகாரைகள் போன்றவற்றை ஒரேமாதிரி பாதுகாப்போம். இது உறுதி.

கிழக்கின் உதயம் உங்கள் உதயமாகும். உங்கள் எதிர்கால உதயமாகும். எந்தத் தீர்மானம் எடுத்தாலும் புத்தியுடன் செயற் பட வேண்டும். எங்களோடு சேர்ந்து வேலை செய்யக் கூடிய நண்பர்களை நீங்கள் தேர்வு செய்யவேண்டும். அப்போது உங்களுக்கும் வசதி. எங்களுக்கும் வசதி. எல்லோருக்கும் வசதி. நான் உங்கள் தோழன். நான் உங்கள் சொந்தக்காரன். நீங்கள் என்னை நம்பா விட்டாலும் நான் உங்களை நம்புகின்றேன். வெற்றிலையின் வெற்றி உங்கள் வெற்றி. வெற்றியின் சின்னம் வெற்றிலைச் சின்னமாகும் என்றார். (எ-11)

## கூட்டமைப்பு வேட்பாளர் பிணையில் விடுதலை

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் சுரேஸ்குமார் நேற்று திங்கட்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்ற நீதிபதி யூ.எஸ்.ஏ. அஸ்கர் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது 10 லட்சம் ரூபாய் காசுப் பிணையிலும் 6பேரின் சரீரப் பிணையிலும் நிபந்தனையின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி அவுஸ்திரேலியாவுக்கு மீன்பிடிப் படகுகள் மூலம் திருகோணமலையிலிருந்து சட்ட விரோதமான முறையில் ஆட்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த மாதம் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மின்தடை

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களை இணைப்பதற்காகவும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரையும் மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (எ)

## மோ. சைக்கிள் மோதி சிறுவன் படுகாயம்

பாடசாலை முடிபடைந்து வெளியேறிய சிறுவனை மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் படுகாயமடைந்துள்ளான்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று மதியம் 12.00 மணியளவில் தாவடியில் உள்ள பாடசாலையொன்றின் முன்னால் இடம்பெற் றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த பாலர் பாடசாலை மாணவனான சசிநந்தன் டிலக்ஷன் (வயது 4) என்பவரே தலையில் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை முடி புற்றதும் வீதியினைக் கடக்க முற்பட்ட வேளை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (எ-4)

'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம் (334)
விபரங்கள் பெற : 773 212 711

குறைந்த கட்டணத்திலான வெளிநாட்டு பொதிகள் சேவைகள்

அதிரடி விலை குறைப்பு

கனடா
லண்டன்
பிரான்ஸ்
ஜேர்மனி
சுவிஸ்

11 கிலோவிற்கு மேல் அனுப்பும் ஒவ்வொரு கிலோவிற்கும் 1000 ரூபா மட்டுமே பெறப்படும்.
1000 X 11 = 11000
இவை 3 நாட்களில் உரியவர் விலாசத்தில் ஒப்படைக்கப்படும்.

ஏழு நாட்களில் பின்வரும் நாடுகளுக்கான சேவை

லண்டன் - 600
சுவிஸ் - 600
கனடா - 700

தொடர்புகளிற்கு

Rainbow Travels
30/2, Third Lane,
Power House Road, Jaffna.
Tel :- 021 221 9596
குறிப்பு: 7 நாட்களும் திறந்திருக்கும்
(C-936)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*ஊர் போற்ற வாழ்ந்த உத்தமியே*
*உமை இழந்து ஓராண்டாயினும்*
*உம் நினைவில் என்றும் நாம்.*

கடந்த வருடம்
2011.09.16 ஆம் திகதியன்று
இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

அமரர் **மார்க்கண்டு சரஸ்வதி**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 04.09.2012 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (C-934)

குடும்பத்தினர்
மருமகன் சி. ஜெயக்கொடி

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்

அறிவித்தல்

யாழ் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து சிற்றூர்திகளையும் உள்ளடக்கி 15 கிளைச்சங்கங்கள் செயற்படுவதுடன் இப் பதினைந்து (15) கிளைச் சங்கங்களை உள்ளடக்கி "யாழ் பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்" (பதிவு இல. GA-2493) எனவும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி "வடஇலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்" (பதிவு இல. GA-2639) எனவும் மேலும் யாழ்ப்பாணம் கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்துகளை உள்ளடக்கி "யாழ்ப்பாணம் கொழும்பு தனியார் பேருந்து வரையறுக்கப்பட்ட கம்பனி" (பதிவு இல. GL-2131) எனவும் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றது. அத்துடன் இம்மூன்று சங்கங்களுக்கும் திரு. பொன்னுத்துரை கெங்காதரன் அவர்கள் தலைவராக உள்ளார். இந்நிலையில் வடமாகாணத்தில் எமது அமைப்பே பதிவு செய்யப்பட்ட, சட்டரீதியான அமைப்பு என்பதனை அனைவருக்கும் தெரியப் படுத்துகின்றோம்.

தலைவர்

CANADAவில் குடும்பத்துடன் குடியேறுவதற்கான VISA ஒழுங்குகள்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறுகிய காலத்தில் Canada செல்வதற்கு ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அத்துடன் Nurses, Accountant, BioMedical Science Diploma முடித்தவர்கள் ஆகியோருக்கு குடும்பமாக (Family Visa)

CANADA TOURIST VISA அரசாங்கத்தில் பதிவு செய்து இலங்கையில் எப்பாகத்திலும் சொந்த வியாபாரம் செய்பவர்கள், 4 மாதங்கள் நன்கு பேணப்பட்ட வங்கி கணக்கு உடையவர்களுக்கு Canada வுக்கு Tourist Visa ஒரு மாத காலத்திற்குள் பெற்றுத் தர ஆலோசனை வழங்கப்படும்.

CYPRUS - நாட்டில் மேலதிக படிப்புக்கு செல்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் Visa ஒழுங்குகள். இவ்விசா மூலம் Paris, Swiss, Italy, Germany போன்ற நாடுகளுக்கு சென்று வரலாம். மொத்த செலவு 600,000 மட்டுமே.

Rainbow Travels
தொடர்புகள்
0778980652
0212219596
30/2, Third Lane,
Power House Road,
Jaffna.
(C-936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விலங்குகள் நோய் கொடுக்கும்

ஒரு நண்பர் வந்தார். அவர் முகத்திலே கீறல்கள்....! நகத்தாலே விறாண்டியது மாதிரி இருக்கிறது....

"என்ன சேர்... வீட்டிலே தகராறா...?" என்று கேட்டேன்.

"இல்லை சேர்... இது செல்லமாக கீறியது..." என்றேன்.

"என்ன சேர் சொல்கிறீர்கள். அநியாயம் அதற்காக இப்படியா?" என்றேன்.

"ஆமாம் சேர்... பாவம் பூனை... அதற்கு என்ன தெரியும்...? என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்றேன். ஒன்றும் புரியவில்லை.

"எங்கள் விட்டிலே செல்லமாக வளர்க்கிறோம் ஒரு பூனைக் குட்டி... அதுதான் விறாண்டியது..." என்றார். அதிலேயும் கன்னத்தை தடவிக் கொண்டு... ! இவ்வாறு கூறினார்.

"அந்தப் பிராணிகளை ஏன் சேர்... வீட்டிலே வளர்க்கிறீர்கள்..." என்றேன்.

நீங்கள் தானே சொன்னீர்கள்... செல்லப்பிராணிகள் வளர்ப்பது மனதிற்கு நல்லது... உடம்பிற்கு நல்லது... என்று.

இப்போது நீங்களே கதையை மாற்றிக் கதைக்கிறீர்கள். இது என்ன சேர் நியாயம்?" என்றார்.

செல்லப்பிராணிகள் வளர்ப்பது நல்லது என்று சொல்வது உண்மைதான்.

அதேநேரத்திலே.. அதற்கு வேண்டிய தடுப்பு ஊசியெல்லாம் ஏற்றி... சுத்தமாக வளர்க்க வேண்டும். அது நமக்கு கெடுதல் செய்வது உண்மைதான் என்று கூறி அவரை சமாதானப் படுத்தினேன்.

பூனை விறாண்டினால் அதனாலே வரும் இடைஞ்சலுக்கு பேர் **CSD... (Cat Scratch Disease)** பூனை விறாண்டல் நோய்! இதனால் என்ன பக்கவிளைவுகள் ஏற்படும்.

முதல் நாளே ஜுரம்.. அதிகப்படியான களைப்பு உணர்ச்சி, எரிச்சல், தலைவலி, தெளிவற்ற பார்வை, கண்ணில் நீர்க் கசிதல் இவையனைத்தும் இருக்கும்.

அன்டிபயாட்டிக் குழுசை மூலமாக இதைச் சரிப்படுத்தலாம். இருந்தாலும் ஐந்தாறு மாதத்திற்கு கஷ்டம்தான். ஒரு பூனையினுடைய இரத்தத்திலே "ஆர்எச்" எனும் ஒரு நுண்ணுயிர் இருக்கும். (ரோச்சலிமியா ஹென்சலா) இதனாலே பூனைக்கு எதுவிதமான தொந்தரவுமில்லை. மனிதனுக்குத்தான் தொந்தரவு. பூனை கடிப்பதினால் அல்லது விறாண்டுவதினாலே இந்த நுண்ணுயிர் மனிதனுடைய தோலைத் தாண்டி உள்ளே போய் விடும்.

நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு பாதிப்பு மிகவும் அதிகமாக இருக்கும்... அதனாலேயே செல்லப்பிராணிகளுடன் விளையாடும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பூனை மாதிரியே நாய் வளர்ப்பவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மனிதர்களுக்கு வயிற்றுவலியை உண்டாக்கும் பற்றீரியாக்கள் சில உண்டு. **(Sarmonella, Camphylo bactor)** இவையெல்லாம் பூனையிடமிருந்தும் நாயிடமிருந்தும் தான் நமக்கு வந்து சேரும் பற்றீரியாக்களாகும். சிறுநீரகத்தையும் ஈரலையும் பாதிக்கும் நுண்ணயிர் ஒன்று உண்டு. அதன் பெயர் லெப்டோஸ் பைரசில் **(Leptospirosis)**என்று சொல்வார்கள்.

இந்த நுண்ணுயிர் நாயிடம் இருந்து தான் மனிதனுக்கு வந்து சேருகிறது என்று வைத்தியர்கள் கூறுகின்றனர்.

ஒருவருக்கு நீண்ட நாட்களாக தொண்டையிலே பிரச்சினை **(Strep throat)**. அவர் வைத்தியரிடம் போனார். வைத்தியரிடம் என்னை சோதித்துப் பாருங்கள்" என்று கூறினார்.

டாக்டர் கூறினார்; "சோதிக்க வேண்டியது உங்களை அல்ல... உங்களின் நாயை" என்றார்.

"ஆமாம்; உங்களுக்கு வந்திருக்கும் இடைஞ்சலுக்கு நாய் தான் காரணமாகும்" என்றார்.

அவர் கூறிய மாதிரி; சோதனை செய்தார். அவரின் வீட்டு நாயின் உடம்பிலே ஸ்ட்ரெட்டோகாக்கஸ் **(Streptococcus)** என்ற நுண்ணுயிர் இருந்தது கண்டறியப்பட்டது.

அதனால் வீட்டில் செல்லப்பிராணிகள் வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் அறிவுபூர்வமாக அவற்றினை வளர்க்க வேண்டும்.

அத்துடன் அதனுடன் அளவோடு பழக வேண்டும். அதுதான் நமக்குப் பாதுகாப்பு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஒட்டுசுட்டானில் 9 கிராமங்களுக்கு —கிராமசேவகர்கள் இல்லை—

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 27 கிராமங்கள் உள்ள போது 9 கிராமத்திற்கு கிராம சேவகர் இன்மையால் மக்கள் சொல்லொணா துயரத்தை அனுபவித்து வருகின்றனர்.

மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது இன்றுவரை 9 கிராமங்களுக்கு கிராம சேவகர் இன்மையால் மக்கள் தமது தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இதில் பண்டாரவன்னி, புளியங்குளம், தச்சடம்பன், அம்பகாமம், ஒதியமலை, பெரியகுளம், பனிக்கன் குளம், கணேசபுரம், பெரிய இத்திமடு ஆகிய கிராமங்களுக்கே கிராம சேவகர் இல்லை. இப்பிரதேச செயலகத்திற்குட்ட ஏனைய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள கிராம சேவகர்களே தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர்.

அவர்களது சேவையை ஒரு நாட்கள் அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே பெற முடிகின்றது.

ஏனையநாட்களில் ஏற்படும் தேவைகளுக்கு யாரிடம் செல்வது இதற்கான விடையை உரிய தரப்பினரே கூற வேண்டும்.

எனவே இந்நிலையை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய ஆவன செய்யுமாறு அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# பிரத்தியேக ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்ப்பாண **STEPS Institute** பதில் இயக்குநர் அறிவித்துள்ளார்.

இவ்வகுப்பிற்கான ஒரு பிரிவு நான்கு கிழமைகளைக் கொண்டதாகவும் (120 மணித்தியாலங்கள்) சனி, ஞாயிறு தினங்கள் விடுமுறைகளைக் கொண்டதாகவும் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புக்களுக்காக தீவக வலயப்பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு நாளை மறுதினம் வியாழக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யா/வேலணை மத்திய கல்லூரியில் மாணவர்களின் தரத்தையும் தேவைகளையும் அறிந்து கொள்வதற்கான தேர்வு நடத்தப்படவுள்ளது.

இவ்வகுப்புக்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும்**STEPS Institute** இல் நடைபெறும். சர்வதேச ரீதியான கற்கை நெறிகளுக்கு **British Council** இனால் பயன்படுத்தப்படும் புத்தகங்கள் இங்கு பயன்படுத்தப்படுவதுடன் **GIZ PIP** இனால் விசேடமாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் ஆங்கிலம் கற்பிக்கப்படும். இக்கற்கை நெறிக்கு மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே மாணவர்கள் உள்வாங்கப்பட இருப்பதனால் 021 222 4580, 021 222 1395 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் முற்பகல் 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை தொடர்பு கொண்டு உங்கள் பதிவினை மேற்கொண்டு உங்கள் ஆசன த்தை உறுதிப்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 110 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 75 | 60 | 80 | 80 |
| தக்காளி | 60 | 60 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 60 | 65 |
| கரட் | 110 | 110 | 90 | 130 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 65 | 70 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 60 | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 80 | -- |
| பயற்றங்காய் | 70 | 60 | 90 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 70 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 20 | 90 | 60 | 30 |
| போஞ்சி | 80 | 110 | 100 | 110 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 190 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 25 | 25 | 20-25 |

# இராசி பலன்

04.09.2012
(ஆவணி 19, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 10.58 மணிவரை
ரேவதி முற்பகல் 10.59 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
ஆவணிமூலம் குங்குலியக்கலயர்
குருபூசை சித்தாமிர்தம்

**மேடம்** கனவு பலிதமுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கணபதியை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்பத்தினருடன் குதூகலப்பயணங்கள் மேற்கொள்ளப்படலாம்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**சிங்கம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, பேச்சில் இனிமை தென்படும், போட்டியாக இருந்தவர்கள் விலகுவர்.

**கன்னி** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டி வரலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடும்.

**துலாம்** திட்டமிட்ட பயணங்கள் கைகூடும், சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், முயற்சியில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகும், புத்திரர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், பெற்றோர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், வாகன சுகமுண்டு.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், குடும்பப் பொறுப்புகள் கூடும், போசன சுகமுண்டு

**மீனம்** விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வாக்குமேன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வருடத்தின் ஒன்பது மாதங்களில் மட்டும் 243 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**இந்த வருடத்தில் கடந்த 9 மாதங்களில் மட்டும் 243 வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சுமார் 9 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளையை மீறி சட்டவிரோதமாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு எதிராக தொடர்ந்து நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இதன்படி இவ்வருடம் தை மாதம் தொடக்கம் ஆவணி மாதம் வரையான காலப்பகுதியில் 243 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சுமார் 9 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, பொருட்களின் விலைகளை உரிய முறையில் காட்சிப்படுத்தி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடாமை, பொருட்களின் நிர்ணய விலையிலும் பார்க்க அதிக விலைக்கு விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்தோடு 110 வர்த்தகர்களுக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டின் பேரில் யாழ்.மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம் மாதம் அந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. மேலும் 19 வழக்குகள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றிலும் 12 வழக்குகள் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றிலும் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதுதவிர தரச் சான்றிதழ் பொறிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, வர்த்தகர்கள் நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாதவகையிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டதிட்டத்திற்கு அமைவாகவும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-6)

# இசைநாடக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரதர் நாராயணன் கோவிலின் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

இம்மஹோற்சவ தினங்களில் இரவு 7 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை அரிச்சந்திர மயான காண்டமும் நாளை புதன்கிழமை காத்தவராயன் சிந்துநடைக் கூத்தும் நடைபெறவுள்ளது. (அ-9)




# அராலி தெற்கு கிராமத்திற்கு கிராம சேவையாளர் தேவை

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 25 கிராம சேவகர் பிரிவுகளில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு சேவையாற்றவென அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளபோதும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு சில கிராமங்களில் நிரந்தர கிராம சேவகர் இல்லாமையால் பதில் கடமையாற்றும் கிராம சேவகர்களை தேடி அலைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜே/162 அராலி தெற்கு கிராமத்தில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு பல வருடங்களாக நிரந்தர கிராம சேவகர் ஒருவர் இன்மையால் பதில் கடமையாற்றும் அராலி வடக்கு கிராம சேவகர் மூலமாகவே தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

தங்கள் கிராமத்தில் கடமையாற்றும் நாட்களைத் தவிர ஏனைய தினங்களில் இவரது சேவையை பெறுவதற்கு மக்கள் அலைந்து திரிவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் தமக்கு ஒரு நிரந்தர கிராம சேவகரை நியமித்து தருமாறு வேண்டுகோள் ஒன்றை அப்பிரதேச மக்கள் முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# யாழில் 89.85 சதவீத மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாகின

## மிதிவெடி செயற்பாட்டலுவலகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 89.85 சதவீதம் மிதிவெடி அகற்றும் பணி பூர்த்தியாக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலகர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும் அரசாங்கத்தினால் விடுக்கப்படும் வேண்டுகோளுக்கு அமைவாக மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருதாகவும் தெரிவித்தார்.

மேலும் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் என சான்றிதழ் வழங்கப்பட்டாலும் அந்தப் பிரதேசங்களில் வெடிக்காத வெடி பொருட்களின் அபாயம் இருக்கும்.

வெடிக்காத வெடி பொருட்கள் யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் நீண்ட காலத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும். இதனை முற்றாக அகற்றுவதற்கு பல வருடங்கள் தேவைப்படும். வன்னிப்பகுதிகளில் தற்போது வெடிக்காத வெடிபொருட்கள் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

குறிப்பாக சிறுவர்கள் வெடிக்காத வெடி பொருட்களை கையாள்வதைத் தடுக்க வேண்டும். அவ்வாறான பொருட்கள் இனங்காணப்பட்டால் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

மிதிவெடிகள் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் வெடிக்காத வெடிபொருட்களினால் பாதிப்பு ஏற்பட்ட வண்ணமேயுள்ளது. மேலும் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 89.85 சதவீதமான பிரதேசம் மிதிவெடி அபாயம் அற்ற பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேசங்களில் மிதிவெடி அகற்றுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டால் மிதிவெடி அகற்றுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# காக்கைதீவு கல்லுண்டாய் வெளியில் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கை

## தடுத்து நிறுத்த விவசாயிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு கல்லுண்டாய் வெளியில் சட்டவிரோத மண் அகழ்வினால் அப்பகுதியில் நெற்பயிர்ச்செய்கை பாதிப்படைவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இச் சட்டவிரோத மண் அகழ்வினால் சில விசாயிகள் நெற்பயிர்ச்செய்கையினை நிறுத்த வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,


கல்லுண்டாய் வெளிப்பகுதியில் மிக நீண்ட காலமாக இச் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. எனினும் இது இதுவரை உரிய தரப்பினராலும் பொலிஸாரினாலும் தடுத்து நிறுத்தப்படவில்லை.

நாம் இது தொடர்பில் பிரதேச சபையிடமும் அறிவித்திருந்தோம். அவர்கள் ஆரம்பத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்திருந்தாலும் தற்போது அதனை கைவிட்டுள்ளனர்.

இப்பகுதியில் மண் அகழப்படுவதனால் அவற்றினூடாக வயல் நிலங்களுக்கு உப்பு நீர் புகுவதனால் உவர்நிலமாக மாறும் அபாயம் காணப்படுவதாகவும் அதிக நீர் உட்புகுவதனால் நெற்பயிர்கள் அழுகிச்செல்கின்றன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இச் சட்டவிரோத மண் அகழ்வினை கட்டுப்படுத்தாவிட்டால் அங்கு காணப்படும் அனைத்து நெல் வயல்களிலும் வெள்ள நீர் உட்புகுந்து பயிர்களுக்கு நாசம் விளைவித்துவிடும்.

இச் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவோர் உளவு பார்ப்பதற்கென சிலரை வைத்திருந்து மிகவும் தந்திரமாக இச் செயலை செய்வதால் அவர்கள் தப்பித்துக் கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு செய்யப்பட்டாலும் மறுதினமே வெளியே வந்துவிடுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-4)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற செயற்றிட்டங்கள் மற்றும் மாகாண சபை அமைச்சுக்களின் கீழ் செயற்படுகின்ற செயற்றிட்டங்களுக்கான மாகாண செயற்றிட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்ட மீளாய்வு அண்மையில் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான வெளியுறவு அலுவல்கள் பணிப்பாளர் சறோஜா சிறிசேன, ஜி.ஐ.இசற் மற்றும் ஜெய்க்கா செயற்றிட்டங்களின் பிரதிநிதிகள், வடமாகாண உயர் அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர்களுக்காக என்னால் முடிந்தளவு பணியாற்றியுள்ளேன்

## கலைஞர் கருணாநிதி பெருமிதம்



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் அங்கேயுள்ள தமிழர்கள் அமைதியாகவும் நலத்தோடும் வாழ வேண்டும் என்பதற்காகவும் என் மனச்சாட்சிப்படி என்னால் முடிந்தளவிற்கு என் வாழ்க்கையில் பணியாற்றியிருக்கிறேன். இப்போதும் பணியாற்றி வருகிறேன் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என் மீது சாட்டப்படும் குற்றச் சாட்டுக்களுக்கு பதில் சொல்வதற்கு எனக்கு முதுகெலும்பு இருக் கிறா? இல்லையா? என்பதை தமிழக மக்கள் அறிவர். முதுகில் பெரிய அறுவைச் சிகிச்சை வரை நடைபெற்று அது உறுதி செய்யப்பட்டுவிட்டது.


கடந்த 1986 ஆம் ஆண்டு ஜுன்3ஆம் திகதி என்னுடைய பிறந்தநாள் விழாவையொட்டி உண்டியலில் 2.75 இலட்சம் ரூபாய், மாலைக்குப் பதிலாக சேர்ந்தது. அந்த நிதியை விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட அனைத்துப் போராளி இயக்கங்களுக்கும் பிரித்து அளிப்பதென முடிவெடுக்கப்பட்டது. ஆனால் சிலரின் மறைமுகத் தூண்டுதல் காரணமாகவோ, என்னவோ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அந்தத்தொகையைப் பெற்றுக்கொள்ளவில்லை.

அன்றிரவு 12 மணியளவில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் என்னை என் இல்லத்தில் வந்து சந்தித்து தங்களால் ஏன் அந்த நிதியைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை என்பதை விளக்கினார்.

என்ன காரணம் கூறினார் என்பதை நான் இப்போது நாகரீகம் கருதி வெளியிட விரும்பவில்லை என்றார். (அ-2)

# இலங்கை ஜனாதிபதி மஹிந்த இந்தியாவுக்கு வருவதா?

## வைகோ சுஷ்மாவுக்கு எச்சரிக்கை



மத்திய பிரதேசத்தில் நடக்கும் விழாவுக்கு இலங்கை ஜனாதிபதியை அழைத்து வருவதாகக் கூறிய பா.ஜ.க. தலைவர் சுஷ்மா சுவராஜை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எச்சரித்துள்ளார்.

ம.தி.மு.க. இனிவரும் காலங்களில் கவனமாக அடி எடுத்து வைப்பதுடன் ஒவ்வொரு முடிவும் வெற்றிகரமாக அமைந்திடும் வகையில் செயற்படும். இனி ம.தி.மு.கவுக்கு நல்ல எதிர்காலம் உள்ளதால் நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை அனைவரும் இப்பொழுதே நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராகுங்கள்.

2014 ஆம் ஆண்டில் நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு கட்சியை பலப்படுத்த வேண்டும். தென்காசி உள்ளிட்ட அனைத்து தொகுதிகளிலும் களத்தில் இறங்கி பணியாற்றுங்கள்.

பா.ஜவை சேர்ந்த சுஷ்மா சுவராஜ் மத்திய பிரதேசத்தில் நடைபெறவுள்ள புத்தா 2600 ஆவது விழாவுக்கு இலங்கை ஜனாதிபதியை அழைத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இது கண்டனத்திற்குரிய காங்கிரஸ் செய்த தவறை பா.ஜ.கவும் செய்தால் அக்கட்சியின் மீதும் எங்களது வெறுப்பினை காட்ட வேண்டிய சூழல் உருவாகும்.

இலங்கை தமிழர்களுக்காக சென்னையில் போராட்டம் நடத்தினால் என்னையும் அழையுங்கள் வருகிறேன் என்று கூறிய ஜஸ்வந்த்சிங் உள்ளிட்ட பல நல்ல தலைவர்கள் உள்ள நிலையில் ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைத்து வருவதாகக் கூறிய சுஷ்மாவை எச்சரிக்கிறேன் என்றார். (அ-2)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)
இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்
36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளவை
MACK POWER
கிர்லோஸ்கார்
மின்சார பிறப்பாக்கி



குறைந்தபட்ச செலவு
இலகுவாக பராமரித்தல்
விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்
ரூபா 595,000 முதல்....
உடன் அழையுங்கள்
071-4269470
077-7563453
சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
US Tire 1/11 நியமத்தின் பிரகாரம் வெளியேற்றல்
மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10,ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி: 011-2691186, தொலைநகல்: 011-2699454
இணையம்: me@mackwoods.com
மின்னஞ்சல்: www.mackwoods.com
(319) (203)

JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
(மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது. பதிவு இல. TVEC- P25/0026)
விவசாய சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்களை பெறவும் சுயதொழில் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் ஏற்ற புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய செயன்முறையினூடான இலவச நான்கு மாத காலப் பயிற்சி நெறியாகும். க.பொ.த தரம் கற்ற 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான பயிற்சிநெறி.
இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 10.09.2012 காலை 9 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்குப் பிறப்பத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமை பத்திரங்கள், கிராமசேவையாளரின் சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.
அதிபர்
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி இல: 021 321 4571,021 2241420
(340)

உயர்தர பரீட்சைகளின் பின் கொம்ப்யூட்டர் படிக்க சிறந்த வாய்ப்பு
Mega ஸ்கொலர்ஷிப்
You can Win Upto 75%
கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்
இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவ மாணவியருக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுக்கான தொழில்சார் பயிற்சி சிஎஸ்சி - ஏசியனிடமிருந்து மட்டுமே.
இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்
ஸ்கொலர்ஷிப் பரீட்சை
செப்டெம்பர் 9th ஞாயிறு
September 2012
Mo Tu We Th Fr Sa Su
1 2
3 4 5 6 7 8 9
10 11 12 13 14 15 16
17 18 19 20 21 22 23
24 25 26 27 28 29 30
CSC - ASIAN COMPUTER EDUCATION
இலவச பரீட்சை அனுமதிகளை எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
(இ/903)
யாழ்ப்பாணம் 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677
நல்லூர் 9, குமார வீதி, 021-2229191
நெல்லியடி கொடிகாமம் வீதி, 021-2262399
[illegible] 021-2270267
[illegible] A9 வீதி [illegible] 021-2283925

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
September 2012 to February 2013
தமிழ் மொழி மூலம்
Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா
கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா
மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
(இ-930)
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்களில் பயனெதுவுமில்லை போராட்டம் தொடர்கிறது

## ப.ஆ.ச.சம்மேளனம் தெரிவிப்பு

வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடத்தி வருகின்ற பணிப் புறக்கணிப்புத் தொடர்பாக நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் சம்மேளனம் தெரிவித்திருக்கின்றது.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு விடயங்களின் மூலம் தீர்வு காணப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆயினும் அதில் பல விபரங்கள் குறித்துத் தெளிவில்லை. கூறப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவது தொடர்பில் காலவரையறை குறிப்பிடப்படவில்லை என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் சம்மேளனத்தின் பொருளாளர் பவித்ரா கைலாசபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளில் உள்ள அரசியல் தலையீடு உட்பட பல விடயங்கள் நீக்கப்பட்டு பல்கலைக்கழகங்கள் மீண்டும் சுதந்திரமாக செயற்படுவதற்கு வழிசமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கும் அரசிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு தரப்படமாட்டது என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருப்பதாகத் தெரிவித்த பவித்ரா கைலாசபதி பல்கலைக்கழக ஆசிரியர்களை விசேட பிரிவின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற தமது யோசனை குறித்து அமைச்சரவைப் பத்திரத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றும் அதனை நாடளாவிய ரீதியில் மக்கள் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதை தாங்கள் உணர்ந்துள்ள போதிலும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றாமல் இழுத்தடிக்கின்ற அரசாங்கமும் அதில் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

## கனிய வளங்களை கண்டறிய வான்வெளி ஆய்வு நடைபெறும்

(கொழும்பு)

இலங்கையின் கனியவளங்கள் பற்றி வான்வெளி ஆய்வை மேற்கொள்ளவுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் டாக்டர் எம்.ஜே. விஜயானந்த தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுக்கான செலவு 17 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இது ஒன்றரை வருடங்களில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1950 களின் பின் நடைபெறும் வான்வெளி ஆய்வாக இது அமையும் எனவும் எம்.ஜே.விஜயானந்த கூறினார்.

மண்ணில் ஆசனிக் நஞ்சு இருப்பதாகக் கூறப்படும் அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் முதலில் இந்த ஆய்வு நடைபெறும் எனவும் அவர் கூறினார். (அ-2)

## இலங்கை வீரருக்கு பயிற்சி; தி.மு.கவும் குரலெழுப்புகிறது

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்குக் கண்டனம் தெரிவித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தி.மு.க உறுப்பினர்கள் கண்டன குரல் எழுப்பினர். இது குறித்து தி.மு.க.சார்பில் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

நேற்றுநாடாளுமன்றஅலுவல்கள்ஆரம்பமாகியவுடன் தி.மு.க. நாடாளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் மக்களவையிலும் திருச்சி சிவா எம்.பி மற்றும் கனி மொழி எம்.பி. ஆகியோர் தலைமையில் மாநிலங்களவையிலும் தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக ஒருமித்த குரலில் இலங்கையில் நடைபெற்ற போரின் போது 40 ஆயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசாங்கம் பயிற்சி கொடுப்பதை நாங்கள் கடுமையாகக் கண்டித்து எச்சரிக்கிறோம்.

இந்திய அரசு இலங்கை இராணு வத்தினரை உடனடியாக திருப்பி அனுப்பிட வேண்டும். இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய மண்ணில் எந்த மாநிலத்திலும் இராணுவப் பயிற்சி அளிப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிப்பதோடு பிரதமர் தலையிட்டு பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணவேண்டும் என்று குரல் கொடுத்தனர்.

இதன்பின்னர் இரு அவைகளும் நண்பகல் 12 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

## மதுபானப் பிரியம் உயிரைப் பறித்தது; மன்னாரில் இளைஞன் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் வங்காலைக் கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றில் மதுபானம் இருப்பதாக எண்ணி அதனை எடுத்து அருந்திய 4 இளைஞர்களில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வங்காலைக் கடற்கரைக்கு கடந்த புதன்கிழமை சென்றிருந்த இந்த 4 இளைஞர்களும் கடலில் இருந்து மிதந்து வந்து கரையொதுங்கிய வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த மதுபான போத்தல் ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர்.

இதில் வெளிநாட்டு மதுபானம் காணப்படுவதாக எண்ணி அந்தப் போத்தலில் காணப்பட்ட திரவத்தை எடுத்து இவர்கள் அருந்தியதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தத் திரவத்தை அருந்திய பின்னர் இந்த 4 இளைஞர்களில் சிலர் வாந்தி எடுத்த போதிலும் அவர்கள் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. இருப்பினும் இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமான நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் உறவினர்கள் கூறியுள்ளனர்.

இவர்கள் அருந்தியதாகக் கூறப்படும் திரவத்தின் வெற்றுப் போத்தல் வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்ட போது அது மதுபானம் அல்ல எனவும் அவர்கள் அருந்திய திரவம் சடலங்களுக்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் போது பயன்படுத்தும் ஒரு வகை மருந்து எனவும் தெரியவந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பாக மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வீட்டுத்தோட்ட போட்டி

(மல்லாவி)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) அறிவித்துள்ளார்.

வீட்டுத்தோட்ட போட்டிகள் கிராம வீட்டுத் தோட்டம், பாடசாலை வீட்டுத்தோட்டம், மாணவர் வீட்டுத்தோட்டம், அலுவலக வீட்டுத்தோட்டம் என ஐந்து பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளது.

போட்டிகளின் போது திட்டமிட்ட பயிர்ச் செய்கை, மண்பாதுகாப்பு முறைகள், சேதனப் பசளைபாவனை, இயற்கைமுறை பீடைக் கட்டுப்பாடு, போசாக்கு, உணவு உற்பத்தி, மிகை உற்பத்திகளை பாதுகாப்பதற்கான செயற்பாடுகள், ஒருங்கிணைந்த பயிர், விலங்கு வேளாண்மை போன்ற பல விடயங்கள் கருத்தில் கொள்ளப்படவுள்ளது.

போட்டியாளர்கள் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக தனித்தனியாக மதிப்பிடப்பட்டு முதலிடத்தை வகிக்கும் போட்டியாளர்கள் மாவட்ட மட்ட போட்டியில் பங்குகொள்ள முடியும்.

ஒவ்வொரு வகையிலும் மாவட்ட மட்டத்தில் முதலாம், 2 ஆம் 3ஆம் இடங்களை பெற்றுக்கொள்ளும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

போட்டி தொடர்பான விபரங்களினை தங்கள் பகுதிக்கான விவசாயப் போதனாசிரியரிடமோ அல்லது கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021 228 5726 077 214 8755 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை எதிர் வரும் 15 ஆம் [illegible] குமாறும் அவர் [illegible]. (அ-3-15)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்குள் அனுமதிக்கக்கூடாது

## திருமாவளவன் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியா வர மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற திருமாவளவன் செய்தியாளர்களிடம் கருத்து கூறுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

மத்திய பிரதேசத்தில் உள்ள காஞ்சியில் புத்த மதம் தொடர்பான கல்வி மையத்துக்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறுகின்றது.

புத்தர் ஞானம் பெற்று 2600 ஆண்டுகள் ஆவதையொட்டி இந்த விழா நடைபெறுகின்றது.

இந்த விழாவில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தரவுள்ளார்.

ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்தாவை இந்தியாவுக்கு வர மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது. இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வலியுறுத்தவுள்ளேன்.

இலங்கை நட்பு நாடு என்று இந்தியாதான் கூறுகிறது. இலங்கை கூறவில்லை.

சீனா, பாகிஸ்தானோடு நட்பாக இருக்கும் இலங்கை எப்படி இந்தியாவின் நட்பு நாடாக இருக்க முடியும் என்றார். (அ-2)

# தமிழர் பிரச்சினையை முன்வைத்தே பல கட்சிகள் அரசியல் நடத்துகின்றன

## தமிழக காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு

இலங்கையில் பிரச்சினை தீர வேண்டும் என காங்கிரஸ் முயற்சிக்கிறது. ஆனால் பிரச்சினை நீடிக்க வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள பல அரசியல் கட்சிகள் விரும்புகின்றன என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடலூரில் மாவட்ட காங்கிரஸ் சார்பில் நடந்த மூப்பனார் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கைத்தமிழர்பிரச்சினையை முன் வைத்தே தமிழகத்தில் பல கட்சிகள் அரசியல் நடத்துகின்றன. அங்கு பிரச்சினை இல்லை என்றால் இங்குள்ள பல கட்சிகள் நடையைக் கட்ட வேண்டியது தான்.

இலங்கை பிரச்சினையில் சுமுக தீர்வு காண காங்கிரஸ் கட்சி முனைப்போடு செயற்படுகிறது.

இலங்கைப் போரால் பாதித்த தமிழர்களின் மறுவாழ்விற்காக 50 ஆயிரம் வீடுகள் கட்டித் கொடுத்துள்ளது. வடபகுதி ரயில் பாதை அமைத்துள்ளது. ஆயிரத்து 300 தமிழர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. பள்ளிகள், மருத்துவமனைகளை சீரமைத்து தமிழர்களின் மறுவாழ்விற்கு வழிவகுத்து வருகின்றது.

இவ்வளவு செய்தும் விளம்பரம் இல்லாத காரணத்தால் காங்கிரஸ் கட்சி ஒன்றுமே செய்யாதது போல் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் சித்திரிக்கின்றன.

இலங்கைத் தமிழர்களுக்காக காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு செய்துள்ள திட்டங்களை பத்திரிகைகள் மூலம் விளம்பரப் படுத்த வேண்டும் என்று பேசினார். (அ-2)

# சட்டவிரோத கருக்கலைப்பு; சந்தேகத்தில் பெண் கைது

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 65 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கிராம பிரசவ மருத்துவிச்சியாக கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் 39 வயது பெண் ஒருவர் அதிக இரத்தப் பெருக்கு காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தப் பெண் சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபட்டதனால் இவ்வாறு இரத்தப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு உள்நாட்டு மருந்துகளைப் பயன்படுத்தி கருக்கலைப்பு செய்த 65 வயது மருத்துவிச்சியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒரு சட்டவிரோத கருக்கலைப்பிற்காக 3 ஆயிரம் ரூபா பணத்தை குறித்த மருத்துவிச்சி அறவீடு செய்வதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (அ-2)

# அதிகளவான மாணவர்களை பல்கலைக்கு உள்வீர்க்க முடிவு

## பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் அதிகளவான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுதீர்மானித்துள்ளது.

இதன்படி இந்த ஆண்டில் கடந்த ஆண்டைவிடவும்4000மாணவ, மாணவியருக்கு கூடுதலாக வாய்ப்பளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இசட் புள்ளி பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இவ்வாறு மாணவ மாணவியருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

மருத்துவம், பொறியியல், கலை மற்றும் முகாமைத்துவ பீடங்களுக்காக உள்ளீர்க்கப்படும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் மொத்தமாக 25 ஆயிரம் மாணவ மாணவியருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளன. (அ-2)

# அம்பாறையில் பலத்தகாற்று; 15 வீடுகள் பகுதியளவில் சேதம்

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில்நேற்று முன்தினம்மாலை வீசிய பலத்த காற்றினால் இரு வீடுகளுக்கு முழு அளவிலும் 15 வீடுகளுக்கு பகுதியளவிலும் சேதமேற்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் போரதீவுபற்று பகுதியிலேயே காற்றுடனான வானிலை நிலவியது.

மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புக்களுக்கு தடை ஏற்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிந்தவூர், காரைதீவு, அட்டாளைச் சேனை, ஒலுவில், பாலமுனை போன்ற பகுதிகளும் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

# திருட்டில் ஈடுபட்ட மாணவர்கள் கைது

ஹற்றன் பொலிஸ் பிரிவில் நடைபெற்ற பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஹற்றன் பிரதேசத்தில் நடைபெற்ற திருட்டு சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பொழுது இவருக்கு உதவிய இரண்டு பாடசாலை மாணவர்கள் தொடர்பான தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போது இந்த இரு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வீட்டு பாவனை பொருட்கள், பணம் மற்றும் கடைகளில் இலத்திரனியல் பொருட்கள் திருடியது மட்டுமல்லாமல் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் திருடி அவற்றை பகுதியாக பிரித்து விற்றுள்ளமை தெரியவந்துள்ளது.




★1781-லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் ஸ்பானிய ஆளுநரான ஃபிலிப்பே டி நெவெ என்பவரால் அமைக்கப்பட்டது.

★1870-பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பதவியில் இருந்து அகற்றப்பட்டான். அரசி யூஜின் தனது பிள்ளைகளுடன் இங்கிலாந்துக்குத் தப்பி ஓடினாள். மூன்றாவது குடியரசு அமைக்கப்பட்டது.

★1884-குற்றவாளிகளை அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்சுக்கு அனுப்பும் கொள்கையை பிரித்தானியா கைவிட்டது.

★1886- 30 ஆண்டுகள் போரின் பின்னர் அப்பாச்சி பழங்குடிகளின் தலைவன் ஜெரனிமோ தனது படைகளுடன் அரிசோனாவில் சரணடைந்தான்.

★1888-தான் கண்டுபிடித்த படம் பிடி கருவிக்கு ஜார்ஜ் ஈஸ்ட்மன் கோடாக என்பதை வர்த்தகக் குறியீடாக காப்புரிமை பெற்றுக் கொண்டார்.

★1939-இரண்டாம் உலகப் போர்: நேபாளம் ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★1939-இரண்டாம் உலகப் போர்: ஐரோப்பியப் போரில் ஜப்பான் நடுநிலையை அறிவித்தது.

★1951-கண்டங்களுக்கிடையேயான முதலாவது நேரடித் தொலைக்காட்சி ஜப்பானில் இடம்பெற்ற அமைதி மாநாட்டில் இருந்து கலிபோர்னியாவின் சான்பிரான்சிஸ்கோ நகருக்கு ஒளிபரப்பப்பட்டது.

★1956-வன்தட்டு நினைவகத்தைக் கொண்ட உலகின் முதலாவது கணனியை ஐபிஎம் அறிமுகப்படுத்தியது.

★1963-சுவிஸ் எயார் விமானம் சுவிட்சர்லாந்தில் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணஞ் செய்த அனைத்து 80 பேரும் கொல்லப்பட்டனர்.

★1970-சல்வடோர் அலெண்டே சிலி நாட்டின் ஜனாதிபதியானார்.

★1971-அலாஸ்காவில் போயிங் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 111 பேரும் கொல்லப்பட்டனர்.

★1972-ஐக்கிய அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் ஜேர்மனியின் மியூனிக் நகரில் இடம்பெற்ற 1972 ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சலில் ஏழாவது தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்தார்.

★1978- அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★1996-கொலம்பிய புரட்சி இராணுவப் படையினர் கொலம்பியாவின் இராணுவ முகாமொன்றைத் தாக்கினர். மூன்று வாரங்கள் நீடித்த இக்கரந்தடிப் போரில் 130 பேர் கொல்லப்பட்டனர்.

★2006- இஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாடசாலை ஒன்றின் அடியில் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு புதைகுழிக் குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

★2007- சூறாவளி ஃபீலிக்ஸ் நிக்கராகுவாவைத் தாக்கியதில் பலத்த நிலச்சரிவுகளும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டன.

### பிறப்புக்கள்

★1941- சுஷீல்குமார் ஷிந்தே, தற்போது இந்தியாவின் நடுவண் அரசின் மின்துறை அமைச்சர்

★1952- ரிஷி கபூர், இந்திய நடிகர்

★1971- லான்ஸ் க்லூஸ்மடன், தென்னாபிரிக்கத் துடுப்பாட்டக்காரர்

### இறப்பு

★2006- ஸ்டீவ் ஏர்வின் அவுஸ்திரேலிய இயற்கை ஆர்வலர் (பி. 1962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தொழிற்சாலைகள் அனைத்தும் வன.தி.இல். பதிவு செய்ய வேண்டும்

## வடபிராந்திய காட்டுத்திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மரஅரிவு ஆலை, தச்சுத்தொழிலகம், மர விற்பனை நிலையம் போன்ற தொழிலகங்கள் வனதிணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படாமல் இயங்கும் தொழிலகங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடபிராந்திய காட்டுத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்,

மரஅரிவு ஆலை, தச்சுத்தொழிலகம், மர விற்பனை நிலையம், மர தளபாட விற்பனை நிலையம், விறகு விற்பனை நிலையம் ஆகியவற்றை பதிவு செய்வதற்கு அதன் உரிமையாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புதிதாக ஆரம்பிப்பதற்கு அல்லது பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட நான்கு விண்ணப்பப்படிவங்கள் (வ.தி.203-95) வட்டவனக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்

மேற்கண்ட தொழிலகம் அமைய இருக்கும் காணி உறுதியின் நிழல் பிரதிகள் நான்கு.

வாடகை அல்லது குத்தகை காணி அல்லது பிறிதொரு நபரின் பெயரில் காணி உறுதி காணப்படுமேயானால் சட்டத்தரணி அல்லது நொத்தாரிசினால் எழுதப்பட்ட குத்தகை ஒப்பந்த பத்திரம் அவசியம் (விண்ணப்பதாரியின் பெயரில் காணி உறுதி காணப்படுமேயானால் குத்தகை ஒப்பந்தம் அவசியமில்லை)

மர அரிவு ஆலை, இயந்திர தச்சுத்தொழிலகம் எனின் சூழல் பாதுகாப்பு உரிமம் அவசியம். உண்மை பிரதியுடன் நிழல் பிரதிகள் மூன்று மேலும் விண்ணப்பதாரியின் பெயரிலும் மேற்குறிப்பிடப்பட்ட தொழிலகம் அமையவிருக்கும் முகவரியில் சூழல் பாதுகாப்பு உரிமம் பெறப்பட வேண்டும்.

பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ் (நிழல் பிரதிகள் நான்கு)

மாநகரசபை அல்லது நகரசபை அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட வியாபார உரிமம் (நிழல்பிரதிகள் நான்கு)

விண்ணப்பதாரியின் தேசிய ஆள்அடையாளஅட்டையின் நான்கு நிழல் பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட தொழிலகங்கள் வனத்திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் இயங்குமேயானால் அவை சட்டத்திற்கு முரணானதாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## குளவிகொட்டியதில் பெண்ணொருவர் பலி

(நுவரெலியா)

நுவரெலியா டயகம தேயிலை தோட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்த குளவி தாக்குதல் காரணமாக 58 வயதான பெண் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் குளவி கொட்டியதால் பாதிக்கப்பட்ட 7 பேர் டயகம வெஸ்ட் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-9)

# சிவில் சமூகத்துடனான சந்திப்பு கிளிநொச்சியில் நடைபெறும்

## யாழ்.பிராந்திய ம.உ. ஆணைக்குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள சிவில் சமூகத்துடனான சந்திப்பினை இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக யாழ். பிராந்திய மனிதவுரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

யாழில் இச்சந்திப்பு நடைபெற்று முழந்த நிலையில் தற்போது இதேபோன்றதொரு சந்திப்பினை கிளிநொச்சியில் நடத்த தீர்மானித்துள்ளோம்.

எனவே இச்சந்திப்பில் கலந்து கொள்ள விரும்பும் கிளிநொச்சியை சேர்ந்த அனைவரும் எம்மிடம் பதிவுகளினை முன்கூட்டியே மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதன்போது சிவில் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இங்கு வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதோடு தனிமனித சுதந்திரம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படும் என்றார். (அ-4)

# யு.என்.கபிற்றற் நிறுவனத்தினால் 4 வெட்டுக் கிணறுகள் அமைப்பு

(மல்லாவி)

யு.என்.கபிற்றற் நிறுவனத்தின் அனுசரணையுடன் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டக் குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினைக்கு தலா 3 இலட்சம் ரூபா செலவில் நான்கு திறந்த வெளிக்கிணறுகளை இந்நிறுவனம் அமைத்து வருகின்றது.

தற்போது துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கடுமையான குடிநீர் பிரச்சினை நிலவுகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தினால் அமைதிபுரம், தேறாங்கண்டல், கோட்டைகட்டியகுளம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டதை அடுத்தே கிணறுகள் அமைக்கும்பணி இந்நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் மழை காலத்திற்கு முன்னர் கிணற்றை வெட்டி அதன் கட்டுமானப் பணிகளையும் நிறைவு செய்யவுள்ளதாகவும் அந்நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (அ-3-15)

# உரமானிய விநியோக பட்டியலை தயாரிக்கும் பணி துரிதகதியில்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச கமநல சேவை நிலையத்தினால் விவசாயிகளிடம் 2012- 2013 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்குரிய உரமானிய விநியோகப்பட்டியலை தயாரிக்கும் வேலை துரித கதியில் இடம் பெற்று வருவதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநலபிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இச்சேவை நிலையத்தில் புதிய அங்கத்தவர்களை இணைக்கும் வேலைகளும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த வாரமும் பதிவுகள் இடம்பெற்றன. இன்று செவ்வாய்க்கிழமை தென்னியன்குளம் கிராமத்திலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை தேறாங்கண்டல் கிராமத்திலும் பதிவுகள் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களின் பதிவுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் நிறைவு செய்யப்படவுள்ளதாகவும் விவசாயிகள் இதனைப் பயன்படுத்தி பயன்பெறுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# ஒழுக்காற்று விசாரணைக்குரியோர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாது

## தயாசிறி எம்.பிக்கு தலையிடி

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாது எனக்கட்சியின் தலைமை உத்தரவிட்டுள்ளது. தயாசிறி ஜயசேகர ஏற்கனவே தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொண்டிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விசாரணைகளை எதிர்நோக்கி இருக்கும் கட்சியின் உறுப்பினர்கள் எவரையும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளச் செய்வதில்லை என ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. இதனடிப்படையிலே தயாசிறி ஜயசேகரவுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர திருகோணமலையில் நடைபெற்ற சில கூட்டங்களில் கலந்து கொண்டிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தயாசிறி கட்சி மற்றும் கட்சியின் தலைமையை விமர்சிப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வரட்சியின் கொடுமை தொடர்கிறது; குடிநீருக்கு அலையும் கால்நடைகள்




(யாழ்ப்பாணம்)

தற்போது பரவலாக ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக கிணறுகள், குளங்களில் நீர் வற்றி வரண்டு போய்க்காணப்படுகின்றது.

இவ்வரட்சி காரணமாக பெரும்பாலும் தீவுப் பகுதியிலேயே இந்நிலமை காணப்படுகின்றது. அப்பிரதேசங்க ளில் காணப்படும் கிணறுகளில் நீர்வற்றி அதனுள் காணப்படுகின்ற ஒரு குழியினுள்ளே நீர் காணப்படுகின்றது.

அவ்வாறு சிறு குழியில் நீர் காணப்படுகின்ற போதும் அந்நீரை பயன்பாட்டிற்கு பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. மற்றும் இங்குள்ள குளங்களில் நீர் வற்றியும் விளை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் என்பன காய்ந்து காணப்படுவதால் கால்நடைகளுக்கு போதிய உணவு, குடிநீர் என்பன கிடைக்காமல் எலும்பும் தோலுமாக அலைந்து திரிவதையும் இறந்து கிடப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. குளங்களில் நீர் வற்றியதால் மீன்கள் இறந்து அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றது. (அ-9)

# வெடிகந்த பிரதேசத்தில் கைக்குண்டுகள் மீட்பு

கொழும்பு கல்கிசை வெடிகந்த பிரதேசத்தில் இருந்து 3 கைக்குண்டுகளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த கைக்குண்டுகள் கண்ணாடி போத்தல் ஒன்றிற்குள் வைக்கப்பட்டிருந்ததாகவும் அதனை கைப்பற்றி தாம் குண்டு செயலிழக்கும் பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. எந்த காரணத்திற்காக இந்த குண்டுகள் குறித்த இடத்தில் வைக்கப்பட்டிருந்து என்பதை கண்டறிய விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

30

## ஸ்ரீமேகவண்ணன்



செங்கை ஆழியான்

சூளவம்சம்


இலங்கையின் வரலாற்றினைக் கூறும் நூலெனக் கொள்ளப்படுகின்ற ஆவணம் மஹாவம்சம் ஆகும். மஹா



சூளவம்சம் கூறும் வரலாற்றின் இறுதி ஸ்ரீவிக்கிரசிங்க

வம்சம் என்பது 100 அத்தியாயங்களைக் கொண்ட நூல். தீபவம்சத்தில் அடங்கியிருப்பதுபோல் 37 அத்தியாயங்கள் மஹாவம்சத்தில் அடங்கியுள்ளன. அந்த 37 அத்தியாயங்களையும் பாளி மொழியிலிருந்து மொழி பெயர்த்த வில்லியம் கெய்கர், முதல் 37 அதிகாரங்களை மஹாவம்சம் என்றும், ஏனைய 38 - 100 வரையான அதிகாரங்களின் தொகுப்பை "சூளவம்சம்" எனவும் வகுத்து மொழி பெயர்த்துள்ளார். சூளவம்ச மொழிபெயர்ப்பில் இரு தொகுதிகளுள்ளன. ஆனால், ஜோர்ஜ் ரேனர் என்பவர் 100 அதிகாரங்களையும் ஒருங்கே மஹாவம்சம் என்ற பெயரோடு மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். வில்லியம் ஹெய்கர் பாளியிலிருந்து முதலில் ஜேர்மனுக்கு மொழிமாற்றம் செய்துள்ளார். ஆனால், ஜோர்ஜ் ரேனர் பாளியிலிருந்து நேரடியாக ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்துள்ளார். அது பின்னர் முதலியார் விஜயசிங்க என்பவரால் மீளாய்வு செய்யப்பட்டு வெளிவந்துள்ளது.

கெய்கர் மஹாவம்சத்தில் 37 அதிகாரங்கள் அடங்கியிருக்கின்றன.



மகாசேனன் கட்டுவித்த குளங்களில் ஒன்று- மின்னேரியா

புத்தரின் இலங்கை விஜயங்களோடு மகாவம்சத்தின் முதலாவது அதிகாரம் ஆரம்பமாகின்றது. கி.மு. 483 இலிருந்து கி.பி.362 ஆம் ஆண்டு வரையிலான வரலாற்றினை இது விபரிக்கின்றது. இலங்கையின் முதலாவது மன்னனாக மகாவம்சம் கூறும் விஜயனிலிருந்து 58-வது மன்னாகிய மகாசேனன் வரை மகாவம்சம் விபரித்துச் செல்கின்றது. மகாசேனனின் மகன் ஸ்ரீமேகவணணனிலிருந்து (கி.மு. 352) ஸ்ரீவிக்கிரமசிங்கன் வரை (கி.பி.1815) சூளவம்சம் விபரிக்கின்றது.

மகாவம்சத்தில் மாமன்னன் துட்டகாமினி எப்படிப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளப்பட்டானோ அவ்வாறே சூளவம்சத்தில் மகா பராக்கிரமபாகு கொள்ளப்படுகின்றான். மகாவம்சத்தில் கூறப்படுகின்ற வரலாற்றில் எவ்வளவு தூரம் நம்பகத் தன்மைக்கான ஜயப்பாடு எழுகிறதோ, அதேபோன்றதொரு வரலாற்று அவநம்பிக்கையைச் சூளவம்சத்தில் கொள்வதற்கான ஏதுக்கள் குறைவு,



சூளவம்சத்தின் பாட்டுடைத் தலைவனாக கருதப்படும் மகாபராக்கிரமபாகுவின் சிலை

ஏனெனில் சூளவம்சத்தில் கூறப்படுகின்ற பல்வேறு வரலாற்றுச் செய்திகளும், கல்வெட்டு ஆதாரங்களால் நிரூபணமாகின்ற மெய்மையைப் பரவலாகக் காணலாமென கெய்கர் உறுதிப் படுத்துகின்றார். சூளவம்சம் கூறும் 37-79 வரையிலான அதிகாரங்களைத் தொடுத்தளித்த தர்மகீர்த்தியின் சூளவம்ச வருணனைகள் இந்தியக் காவிய மரபினை நினைவுபடுத்துவனவாக இருக்கின்றன. புத்தம், தர்மம், சங்கம் ஆகியவற்றைப் பேணி தம் ஆட்சிக்காலத்தில் பெரும் பங்களித்த மன்னர்களைச் சூளவம்சம் உயர்த்திப் பேசுவதையும், நீர்ப்பாசன நாகரீகத்துக்குத் தொண்டாற்றிய மன்னர்களை விதந்துரைப்பதையும் அவ்வாறு தொண்டாற்றாத மன்னர்களின் பணிகள் அமுக்கிப் பேசப் படுவதையும் சூளவம்சத்தில் காணலாம்.

மகாவம்சத்தின் இறுதி அதிகாரத்தின் (37) தொடர்ச்சியாக சூளவம்சத்தின் முதலாவது அதிகாரம் அமைகின்றது. மகாசேனனின் இருபத்தேழு வருட ஆட்சியின் (கி.பி 334-கி.பி 361) இறுதியில் அவன் இறந்து போக, அவனது மகனான ஸ்ரீமேகவண்ணன் முடிதரித்துக் கொண்டான். அவன் முடிசூடிக் கொண்ட கால வேளையில், இலங்கையின் சமய, சமூக, பொருளாதாரச் சூழல் எவ்வாறிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளில், தொடர்ந்து சூளவம்சத்தின் வரலாற்று விபரணயைப் புரிந்து கொள்ள முடியும்.

1.அனுராதபுரம் தொடர்ந்து முக்கிய ஆட்சி மையமாக விளங்கியது. அனுராதபுர மாமன்னனின் அதிகார வரையறைகளை ஏற்ற சிற்றரசுகள் இலங்கையின் நாலா பகுதிகளிலும் இருந்தன.

2.தேரவாத பௌத்த கருத்துக்களை அனுஷ்ட்டிக்கும் மகாவிகாரைப் பிக்குகளும், மகாயான பௌத்தக் கருத்துக்களை அனுட்டிக்கும் அபயகிரி விகாரைப் பிக்குகளும் ஆட்சிக் காலத்தில் இருந்தனர். ஆட்சியாளனின் சிந்தனையில் இம்மாதங்களில் எது உண்மையான புத்தரின் போதனைகளைக் கொண்டதென்ற எண்ணம் தலை தூக்கியபோது அவன் எடுக்கும் முடிவு ஒரு சமயப் பிரிவிற்குப் பெரும் சோதனைகளை ஏற்படுத்தியது.

3. நீர்ப்பாசன நாகரீகமும் நீர்ப்பாசன நெற்செய்கையும் சிறப்புற்று விளங்கியது, மகாசேனனின் கட்டமைப்புகளான நீர்ப்பாசன வசதிகள் நீரைத் தேக்கி நெற்செய்கையின் விருத்திக்குதவின.

### ஸ்ரீமேகவண்ணன்

இவ்வாறான சூழலில்தான் மகாசேனனின் மகனான ஸ்ரீமேகவண்ணன் அரசனாக முடிசூடிக் கொண்டான். இவன் அரியணை ஏறியதும் முதலில் செய்த காரியம், அவனது தந்தை மகாசேனனால் அழிக்கப்பட்டும் போற்றுவாரற்றுமிருந்த மகாவிகாரையைச் சேர்ந்த பிக்குகளை வரவழைத்தமைதான். அவன் அப்பிக்குகளை வரவேற்று அமர்த்தி சங்கமித்ததேரரின் ஆலோசனையோடு எனது தந்தை மகாவிகாரைக்குச் செய்த தீங்குகள் யாவை? என வினாவினான். உங்கள் தந்தையார் மகாவிகாரைகளின் எல்லைகளை குறுக்கிவிட்டார். எனினும், முற்றாக அவ்வாறு செய்ய முடியாது போனமைக்கு சில பிக்குகள் அந்த எல்லைப் பரப்புக்குள் இருந்தமை தடையாக அமைந்தது. ஏழு பிக்குகள் மகாவிகாரை எல்லைக்குள் நிலவறை ஒன்றினுள் மறைந்திருந்தனர். உங்கள் தந்தையின் அமைச்சாரான சேனாவும், மகாயான தேரர் சங்கமித் திரரும் சேர்ந்து உங்கள் தந்தை மகா சேனனைப் பிழையான வழியில் நடாத்தியுள்ளனர். மகாவிகாரைக்குச் சொந்தமான ஏழடுக்கு மாளிகையான லோகபாசாத உட்படப் பல கட்டிடங்களை அழித்தனர். அப்பொருட்களை அபயகிரி விகாரைக்கு எடுத்துச் சென்றனர் என மகாவிகாரைப் பிக்குகள் கூறுனர். அவன் தந்தை மகாசேனன் மகாவிகாரைகளுக்கு இழைத்த தீமைகளுக்குப் பரிகாரம் காணவேண்டி, மகாசேனனால் அழிக்கப்பட்ட லோகபாசாத முத லான கட்டடங்களைப் புதிதாக



மட்டக்களப்பு, திருகோணமலைக்கு இடையில் காணப்பட்ட 8 ஆம் நூற்றாண்டுக் காலத்திற்குரிய போதிசத்துவத்தாரா வெண்கலச்சிலை

அவற்றின் பழைய தோற்றப் பொலிவோடு நிறுவிக் கொடுத்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைத் திணைக்கள கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த தீர்மானம்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பரீட்சைத்திணைக்கள கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் பரீட்சை திணைக்களத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பரீட்சைகளில் ஏற்பட்ட குளறுபடிகள் உள்ளிட்ட பிரச்சினை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை திணைக்களத்தின் நம்பிக்கை தொடர்பில் எவ்வித சிக்கல்களும் ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பரீட்சை திணைக்களத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்யவும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதேவேளை தேசிய பாடசாலைகளில் 20 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கடும் வரட்சி தொடர்கிறது; பவுசர்மூலம் குடிநீர் விநியோகம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள 20 இற்கு மேற்பட்ட கிராமங்களில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக குடிநீர் பிரச்சினை நிலவி வருகிறது.

மேற்படி கிராமங்களில் மிகவும் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வதாக துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் வீ.இராசரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப்பவுசர்களில் ஒன்றை துணுக்காய் கிராமத்தை சேர்ந்த எஸ்.கமலேஸ்வரன் அன்பளிப்பு செய்தார்.

மேலும் உழவு இயந்திரத்தையும் துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் இருந்து தற்காலிகமாக பெறப்பட்ட உழவிய ந்திரத்தின் உதவியுடனும் மேற்படி குடிநீர் சேவை இடம் பெற்று வருகின்றது. ஆயினும் பொதுமக்களுக்கு முழுமையான சேவையை வழங்க இப்பவுசர்கள் போதுமானதாக இல்லை.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எமக்கு மேலும் பவுசர் வண்டிகளை அன்பளிப்பு செய்ய வேண்டும். இவர்களின் உதவிகள் கிடைப்பின் நிறைவான குடிநீர்த் தேவையினை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# கண்ணிவெடி அகற்றும்பணி பாதுகாப்பு அமைச்சிடம்

## 2014 இல் நடைமுறைக்கு

2014 ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை இலங்கை பாதுகாப்பு அமைச்சே மேற்கொள்ளவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் வெளியேறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் போர் முடிந்த பின்னர் கண்ணிவெடி அகற்றும் சர்வதேச நிறுவனங்கள் வடக்கில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தன.

இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டன.

இருப்பினும் யாழ்.மாவட்டத்தில் ஒரு சில நிறுவனங்கள் தொடர்ந்தும் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. யாழ்ப்பாணத்தில் முழுமையாக கண்ணிவெடி அகற்றி முடிப்பதற்கு இன்னமும் 10 ஆண்டுகள் வரையில் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 திகதி கொழும்பில் உயர்மட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் இலங்கையிலுள்ள தூதுவர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா. முகவர் அமைப்புக்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிதி வழங்கும் நிறுவனங்கள் என்பன கலந்து கொண்டன.

இதில் 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இலங்கை பாதுகாப்பு அமைச்சு இலங்கையில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் ஊடாக இதனை மேற்கொள்ளவுள்ளது. இதன் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து கண்ணிவெடியகற்றும் நிறுவனங்கள் இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நாடு சரியான பாதையில் செல்வதை மக்கள் சர்வதேசத்துக்கு சொல்வர்

## ஜனாதிபதி நம்பிக்கை

அரசியல் நோக்கங்களுக்காக சிறுவர்கள் பகடைக்காய்களாக்கப்படக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 61 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் விவகாரங்களில் பாடசாலை மாணவர்களை தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டாம்.

பாடசாலை மாணவ, மாணவியரை பிழையாக வழிநடத்தி அவர்களை வீதியில் இறக்கி போராட்டம் நடத்தும் சூழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறுவர் சிறுமியரை பகடைக்காய்களாக பயன்படுத்தக்கூடாது.

எதிர்வரும் தேர்தலில் நாடு சரியான பாதையில் செல்கின்றது என்ற செய்தியை மக்கள் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைப்பார்கள் என்றார். (அ-2)

# ஊடகவியலாளர்கள் கொலைக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும்

## கர்தினால் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களை கடத்திய மற்றும் கொலை செய்த நபர்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற சிக்னீஸ் விருது வழங்கல் விழாவில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டதுடன் சில ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர். ஊடக விதிகள் ஒழுக்க முறைமைகளுக்கு முரணாகச் செயற்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. வர்த்தக நோக்கங்களினால் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

மனிதவுரிமை மற்றும் மானுட விழுமியங்களுக்கு கொஞ்சமும் மதிப்பளிக்காது சில ஊடகவியலர்ளர்கள் செயற்படுகின்றனர். ஊடகங்கள் இழிவான எண்ணங்களுக்கும் பணியக் கூடாது.

மானுட விழுமியங்களை பாதுகாக்க வேண்டியது ஊடகங்களின் தார்மீக பொறுப்பாகும் என்றார். (அ-2)



கரணவாய் கப்பூது கிராமத்தில் நெல்லியடி பொலிஸாரினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு இலவச தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுமகன் ஒருவருக்கு பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தென்னங்கன்று வழங்குவதை படத்தில் காணலாம்.

# மட்டு. விமான நிலைய அபிவிருத்திப் பணிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 800 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு உள்ளக விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது. ஆரம்ப நிகழ்வுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றார்.

மட்டக்களப்பு விமான நிலையத்தின் ஓடுதளம் உள்ளிட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. ஆயிரத்து 700 மீற்றர் நீளத்திலான விமான ஓடு பாதை ஒன்றும் விமானத் தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. (அ-2)

# திட்டமிட்டபடி 16 ஆம் திகதி மிருகபலி பூஜை நடைபெறும்

## ஆலய பிரதம குரு திட்டவட்டம்

திட்டமிட்டவாறு எதிர்வரும் 16 ஆம் திகதி மிருகபலி பூஜைகள் நடைபெறும் என முன்னேஸ்வரம் ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலயத்தின் பிரதமகுரு காளிமுத்து சிவபாதசுந்தர குருக்கள் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கபிலவஸ்து புனிதப்பண்டம் காட்சிப்படுத்தும் காரணத்தினால் கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த மிருகபலி பூஜை ஒத்தி வைக்கப்பட்டது.

குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு மிருகபலி பூஜை ஒத்தி வைக்கப் பட்டது.

கபிலவஸ்து புனிதப் பண்டம் காட்சிப் படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இதேவேளை, மிருகபலி பூஜைகளை அனுமதிக்கப் போவதில்லை என சூளுரைத்துள்ள அமைச்சர் மேர்வின் சில்வா மீண்டும் மிருகபலி பூஜைக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு இளமைப் பருவத்தில் ஏற்படும் உடல்-உள பிரச்சினைகளும் தீர்வுகளும்

குழந்தைப் பருவம் தொடங்கி குமரப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என ஒவ்வொரு பருவத்திலும் பல்வேறு வகையான அனுபவங்களும் பிரச்சினைகளும் மனிதனுக்கு ஏற்படுகின்றன.

எனினும் குமரப்பருவமே ஒரு மனிதனின் வாழ்க்கைப் போக்கினை தீர்மானிக்கின்றது என உளவியலாளர் குறிப்பிடுகின்றார். குமரப்பருவத்தில் ஏற்படும் ஆளுமை வளர்ச்சியானது (Personality Development) மனிதனது வாழ்நாள் முழுவதும் செல்வாக்குச் செலுத்துகிறது. இப்பருவத்தில் ஏற்படும் மன அல்லது உள வளர்ச்சியினையும் சிக்கல்களையும் புரிந்துகொண்டால் ஒருவன் தனது ஆளுமையை சிறந்த முறையில் வளர்த்துக் கொள்ள உறுதுணையாக அமையும்.



மனித வளர்ச்சிப் பருவத்தில் பதின் மூன்று வயது முதல் பத்தொன்பது வயதுவரையுள்ள பருவம் குமரப்பருவம் (Adolescence)எனப்படுகின்றது. பிள்ளைப் பருவத்திற்கும் முதிர் பருவத்திற்கும் (Teenage) இடையேயுள்ள இப்பருவத்தை ஓர் அமைதியற்ற சிக்கல் நிறைந்த பருவம் என ஸ்டான்லின் ஹால் (Stalinhall) என்னும் உளவியலறிஞர் குறிப்பிடுகின்றார்.

இப்பருவத்தில் ஓமோன்களின் (Hormones) உற்பத்தி மாற்றம் காரணமாக உடலிலும் மனத்திலும் இனம்புரியாத மாற்றங்கள் தோன்றுகையில் எதுவும் தெளிவாகப் புரியாமல் தடுமாற்றத்திற்கு உள்ளாகித் தத்தளிக்கும் ஓர் உணர்ச்சிமிக்க இரண்டுங்கெட்டான் பருவமாகும்.

இப்பருவத்தில் உணர்வுகளுக்குச் சரியான வடிகால்களும் பரிமாற்றமும் இல்லாததே இத்தகைய பிரச்சினைகளுக்கு காரணமாகும். இப்பருவத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத்தினர் அவர்களுக்கு சரியான வகையில் சுதந்திரம், பரிவு, பாதுகாப்பு, அன்பு போன்றவை அளிப்பதோடு அவர்களையும் புரிந்து கொண்டு ஒழுகும் தன்மையும் மிகவும் அவசியமாகும்.

குமரப்பருவத்தில் ஏற்படும் உடல் மன வளர்ச்சிகளையும் பிரச்சினைகளையும் பின்வரும் 4 வகையில் நோக்கலாம்.

**1.உடல் வளர்ச்சி**
**2.அறிவு வளர்ச்சி**
**3.மனவெழுச்சி வளர்ச்சி**
**4.சமூக வளர்ச்சி**

### உடல் வளர்ச்சி (Physical Development)

குமரப் பருவம் குறித்து தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் முதலில் அந்தப் பருவத்தினரின் உடல் ரீதியான மாற்றங்களை அறிய வேண்டியது அவசியமாகின்றது. பெண் பிள்ளைகளுக்கு இப்பருவத்தில் உடலின் மெருகு கூடுவது, அங்கங்கள் வளர்ச்சி அடைவது, மாதவிலக்கு ஏற்படுவது போன்ற மாற்றங்கள் நிகழ்வது போல ஆண்களுக்கு முகத்தில் உரோமம் வளர்வதும், குரல் மாறுவதும், உயரம் கூடுவதும் போன்ற மாற்றங்களும் ஏற்படுகின்றன.

அத்துடன் பாலுறுப்புகள் வளர்ச்சி பெற்று பாலுணர்வு மேலோங்கிடத் தொடங்குகிறது. இவ்வாறான மாறுதல்கள் அவர்களது வழக்கமான நடத்தையை வெகுவாகப் பாதிக்கின்றன. மேலும் நமது பண்பாட்டில் பாலியல் கல்வி தவிர்க்கப்பட்டிருப்பது இப்பருவத்தினரின் சிக்கலை மேலும் மிகுதிப்படுத்துகிறது. இவர்கள் தம்மைச் சுற்றி இருப்பவர்கள் தங்களை கவனிப்பது போல் உணர்ந்து செயற்படுவதுடன் தங்களை அழகுபடுத்தல், உடலை கட்டுக்கோப்புடன் வைத்திருத்தல் என்பனவற்றில் கவனம் செலுத்தி, தங்களது பிரச்சினைகளிலேயே அதிகம் மூழ்கிப் போகிறார்கள்.

### அறிவு வளர்ச்சி (Cognitive Development)

இப்பருவத்தில் நுண்ணறிவு (Intelligence) வளர்ச்சி அடைகிறது. எதற்கும் எதிர்வாதம் செய்யும் நிலைமை ஏற்படுவதுடன், சண்டை, சாகசங்கள் நிறைந்த கதைகளில் பேரார்வம் கொள்ளும் போக்கும், கற்பனைத்திறன் மேலோங்கி நிற்கின்ற போக்கும் காணப்படுகின்றது.

வெளியுலகத் தொடர்புகளில் ஆர்வம் மிகுதியும் பகற்கனவு (Day Dreams) காணுதலில் ஈடுபாடும் அதிகரிக்கிறது. எப்போது பார்த்தாலும் எதையாவது சிந்தித்தவாறு பெரும் சிந்தனையாளர் போல் தோற்றமளிப்பதுடன் சாதனைகள் புரிய வேண்டும் என்கிற ஆர்வமும் இப்பருவத்தில் தலைதூக்கி நிற்கின்றது.




### மனவெழுச்சி வளர்ச்சி (Emotional Development)

அன்பு, மகிழ்ச்சி, அச்சம், கோபம், துயரம், பொறாமை, எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் போன்ற குணங்கள் இப்பருவத்தினரைப் பெரிதும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இப்பருவத்தினர் தங்களைத் தாங்களே பெரியவர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். பிறருடைய அறிவுரைகளை ஏற்க மறுப்பதுடன் தங்களது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர். மேலும் தமக்குரிய அளவில் மதிப்பளிக்க வேண்டுமெனவும் விரும்புகின்றனர்.

தங்களது உணர்வுகளுக்கு மாறாக எது நடந்தாலும் கோபமும், சலிப்பும் வெறுப்பும், விரக்தியும் அடைகின்றனர். அத்துடன் சமூகத்தில் முக்கியமான அந்தஸ்து வகிக்க வேண்டும் என்பன போன்ற எதிர்பார்ப்புக்களில் பலவாறான கற்பனைகளையும் வளர்த்துக் கொள்கின்றார்கள். தமது எண்ணங்களுக்கு மாறாக தோல்விகளைச் சந்திக்க நேர்கையில் துன்பமடைவதுடன் மனச்சோர்வு (Depression) ஏற்பட்டு விரக்தியின் விளிம்பிற்கே சென்றுவிடுவர்.

இதனால் தற்கொலை எண்ணங்களும் (Suicide thoughts) இப்பருவத்தினரிடையே அடிக்கடி தலைதூக்கும். மேலும் இப்பருவத்தினரிடம் உணர்ச்சி மிகுந்து காணப்படுவதுடன் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதனையும் காண முடியும். இப்பருவத்தில் மனச்சோர்வினால் ஆண்களைவிட பெண்பிள்ளைகளே அதிகம் துன்பப்படுகின்றனர் என ஆய்வுகள் காட்டுகிறது.

### சமூக வளர்ச்சி (Social Devolopment)

பொதுநலனில் அக்கறை கொள்ளும் பருவமாகவும் இப்பருவம் விளங்குகிறது. ஊக்குவிப்பும் ஆதரவும் இப்பருவத்தினருக்கு பெருமளவில் அவசியமாகிறது. தங்களது நண்பர் குழுவில் பிறரது குறுக்கீடுகளை இவர்கள் விரும்புவதில்லை. இப்பருவத்தினர் சில சமயங்களில் மிகப் பெரிய மனிதர் போலவும் நடந்து கொள்வார்கள்.

தங்கள் குழந்தைகள் குமரப்பருவத்தில் முதிர்ச்சி பெற்றவர்களாக வளர்ச்சி பெறுகின்றனர் என்பதைப் பெரும்பாலும் பெற்றோர்கள் அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடிவதில்லை. இவர்கள் தம்மை எவரும் புரிந்து கொள்ளவில்லையே என்கிற மனப் பாதிப்புக்கு அடிக்கடி உள்ளாகிறார்கள்.

குமரப்பருவத்தில் சிலர் சமூக நெறிமுறைகளோடு ஒத்துப்போக முடியாமல் தவிப்பதோடு தமது கலாசாரங்களுக்கேற்ப தம்மால் நடந்துகொள்ள முடியவில்லையே என்று எண்ணி தம்மை நொந்துகொள்வதால் தன்னிரக்கம், குற்ற உணர்வு (Guilt feeling), மனச்சோர்வு (Depression) ஆகிய உளப் பாதிப்புக்களுக்கும் ஆளாகிறார்கள்.

சிலர் தவறான கருத்துக்களையும் முன்மாதிரிகளையும் எளிதில் ஏற்றுக்கொள்ளும் மன நிலையைப் பெற்று திகழ்வதால் பலவாறான குற்றங்களை இழைப்பவர்களாகி விடுகின்றனர். ஏமாற்றுதல், பொய்பேசுதல் ஆகியவற்றிலும் ஈடுபடுகிறார்கள். இன்னும் சிலர் பிறரோடு பழகுவதைக் குறைத்துக் கொண்டு தனிமையை நாடுகின்றனர்.



குமரப் பருவத்தினரின் உள இயல்புகளையும் உடல் வளர்ச்சியின் தன்மைகளையும் புரிந்து கொண்டு அவர்களைத் தக்கவாறு வழிநடத்திச்சென்று இப்பருவத்தை அவர்கள் கடந்து செல்ல உதவ வேண்டிய பெரும்பொறுப்பு குடும்பத்தினருக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சமூகத்திற்கும் உண்டு.

### ஆசிரியர் பங்கு (Role of Teacher)

✧ மாணவரை உற்சாகப்படுத்த (Encourage) வேண்டும்.

✧ தனி மாணவரின் மனமறிந்து அதற்கேற்ப வழிகாட்டுதல்(Guidance) வேண்டும்.

✧ வினா எழுப்பும் மாணவர்களை தட்டிக் கொடுத்து ஊக்குவித்து உரியவாறு விடை அளித்திட வேண்டும்.

✧ சமூக சேவை(Social service), சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டு இயக்கங்கள், கோயில்கள் வாயிலாக தொண்டுப் பணிகளில் ஈடுபாடு கொள்ளச் செய்து அவர்களை வழிநடத்த வேண்டும்.

✧ தவறு செய்துவிடும் மாணவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

✧ நிறைகளைக்கூறி குறைகளை தகுந்த முறையில் களைய முற்பட வேண்டும்.

✧ கடும்சொற்களால் ஏசுவதை தவிர்த்து அனுசரணையுடன் அவர்களை அணுகிட வேண்டும்.

எனவே, அவர்களின் உணர்வுகளை நன்றாகப் புரிந்துகொண்டு ஆசிரியர்கள் அவர்களிடம் நட்புணர்வுடன் பழகுதல் வேண்டும்.

### பெற்றோர்களின் பங்கு (Role of parents)

✧ எப்போது பார்த்தாலும் 'இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிட்டு(order) கொண்டு இருப்பதைப் பெற்றோர் தவிர்த்திட வேண்டும்.

✧ போதனை செய்வதை அளவுடன் நிறுத்திக்கொள்வது நன்மை பயக்கும்.

✧ அன்புடனும் நட்புணர்வுடனும் நல்வழி நடத்திச் செல்ல வேண்டும்.

✧ எல்லா நேரமும் குறைகுற்றம் கூறிக் கொண்டே இருத்தல் கூடாது.

✧ பிள்ளைகள் முன்னிலையில் கணவன், மனைவி பிரச்சினைகள் அதனை பிள்ளைகள் கவனித்தல் என்பன தவிர்க்கப்படுதல் வேண்டும்.

✧ பெரியவர்கள் செய்யும் தவறுகள் போன்றவை பிள்ளைகள் நெறிமாறிச் சென்றுவிட வழிகோலும். எனவே, முடிந்தவரை பிள்ளைகள் முன்னிலையில் சண்டை சச்சரவுகளும் வீணான விவாதங்களும் இடம் பெற்று விடாமல் பார்த்துக் கொள்வது பெற்றோர், பெரியோரது கடமையாகிறது.

✧ ''நீ உருப்படமாட்டாய்'', ''நீ எங்கே படிக்கப் போகிறாய்?'' என்பன போன்ற வார்த்தைகள் பாவிக்கக்கூடாது. இது இப்பருவத்தினரின் மனத்தைப் பெருமளவில் பாதித்து அவர்களை மனச்சோர்வுக்குள்ளாக்கி ஆளுமைப் பிறழ்வையும் (Personality Disorder) ஏற்படுத்திவிடும்.

இவற்றை எல்லாம் பெற்றோர் புரிந்து கொண்டு செயற்படாவிட்டால் காலப்போக்கில் எதிர்ப்புணர்ச்சியும் அலட்சிய மனோ பாவமும் உருவாகிவிட வழிவகுக்கும். அன்பும் பரிவும் அரவணைப்பும் வேறெங்கேனும் கிடைத்து விட்டால் அதனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவே அவர்களின் மனம் முற்படும். மாறாக இவை கிடைக்காவிட்டால் எதிர்பாலாரிடம் தவறுதலாக நடந்து கொள்ளுதல் (Rape), புகைப்பிடித்தல் (Smoking) போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் (Drug Addiction) போன்ற தீய பழக்கங்களுக்கு இலக்காகிவிட நேரிடும்.

எனவே, பெற்றோரும் ஆசிரியரும் பிறரும் அவர்களைப் புரிந்து கொண்டு அன்புடனும் பரிவுடனும் அணுகி அவர்களை அரவணைத்து நல்வழி காட்டிச் செல்ல வேண்டும்.

மரபு நெறிகளும் பண்பாட்டுச் சிறப்புகளும் இப்பருவத்தினரை தவறுகள் இழைத்து விடாமல் தடுத்து நிறுத்தி நல்வழிப்படுத்தும் பெரும் காரணியாய்த் திகழக் கூடும். என்றாலும் இன்றைய நாகரிகப் போக்கும் கலாசாரக் கலவைகளும் பிற தளங்களும் நவீன நடைமுறைகளும் மரபு ஒழுக்க நெறிமுறைகளை மீறிவிடும் பழக்கங்களுக்கு உட்படுத்தி விடக்கூடும். ஆதலின் குமரப்பருவத்தினரைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து அவர்களைப் புரிந்து கொண்டு அன்புடனும் பரிவுடனும் அணுகி அவர்களை அரவணைத்து நல்வழி காட்டுவது பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் சமூகனத்தினதும் கடமையாகும். இதன்மூலம் ஆரோக்கியமான ஆளுமையுள்ள சமுதாயம் உருவாக வழிவகுக்கலாம்.


கலாநிதி க.கஜவிந்தன்
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்,
மெய்யியல்/உளவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழம் நோக்கி வாருங்கள்..!

## மரணத்துடன் போராடி மீண்ட மனிதரின் கதைகளை நாம் கேட்கவேண்டும் !

புலம்பெயர்ந்த ஈழமக்கள் மீண்டும் ஈழம் நோக்கி ஒருதரமாவது செல்ல வேண்டும் ஏன் செல்ல வேண்டும்?

போரினால் பாதிக்கப்பட்ட மனிதர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்கவேண்டும். அவர்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும்... என யார் யார் எல்லாம் சிந்திக்கிறார்களோ... விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரும் மீண்டுமொருதரமாவது ஈழம் செல்லவேண்டும். மரணத்தை வென்ற மனிதர்களுடன் சில கணமாவது வாழவேண்டும்... மரணத்துடன் போராடி மீண்ட மனிதர்கள் கதைப்பதைக் கேட்க வேண்டும்...மனமுடைந்து போனவர்களுடன் மனம்விட்டுப்பேச வேண்டும்... அப்போழுதுதான் அவர்களது வாழ்க்கை நிலையை, அவர்களது பிரச்சினைகளை, அவர்களது இல்லாமையை, அவர்களது இழப்புகளை, அவர்களது தேவைகளை, அவர்களது வலிகளை அறியவும் உணரவும் முடியும். இதனூடாக ஏற்படும் புரிதல்களே நாம் முழுமையான பங்களிப்புடன் அதற்கான தீர்வுகளை நோக்கி செயற்படுவதற்கு வழி வகுக்கும். இந்த மனிதர்கள், தாம் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரமாக வாழவேண்டுமாயின், இரண்டுவகையான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்கவேண்டும்.

முதலாவதை அரசியல் வேலைத் திட்டம் என்று கூறலாம்.

இரண்டாவதை சமூக, பொருளாதார, மனித மேம்பாட்டிற்கான திட்டமாகக் கருதிக்கொள்ளலாம்.

அரசியல் வேலைத்திட்டம் என்பது விரிவாகவும் ஆழமாகவும் சிந்தித்து நீண்டகால நோக்கில் முழுமையான பங்களிப்புடன் ஆற்ற வேண்டிய ஒன்று. ஏனெனில் இதில் இலங்கை அரசுடனானதும், சிங்கள தேசத்துடனானதுமான முரண்பாடுகள்-பிரதான முரண்பாடாகவும் நீண்டகாலமாக தீர்க்கப்படாமலும் இருந்து வருகின்றன. மேலும் இந்த நாட்டிற்குள் பன்முகதேசங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் நிலவுகின்றன. அதேவேளை சர்வதேச உறவுகளை உள்ளடக்கிய சிக்கலான பிரச்சினையாகவும் இது இருக்கின்றது.

ஆகவே இந்த முரண்பாடுகள் அரசியல் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. நமது தமிழ், முஸ்லிம், மலையக தேசங்களில் அரசியல் பிரதிநிதிகள் எவ்வாறு இந்த முரண்பாடுகளை கையாள்கிறார்கள் என்பதனைப் பொறுத்தும், சிங்கள தேசத்தின் பிரதிநிதிகள் எவ்வாறு புரிந்துகொண்டு பங்களிப்பு செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இதற்கான தீர்வுகள் கிடைக்கும். தற்போதைக்கு இதை அவர்களிடம் விட்டுவிடுவதே நல்லது. ஆனால், இவர்கள் எந்தளவிற்கு தூரநோக்குடன் சிந்தித்து மனித விடுதலைக்காகவும் நல்வாழ்விற்காகவும் செயற்படுகிறார்கள் என்பது கேள்விக்குரியதே?

இவர்களில் நம்பிக்கையில்லையெனில் நாம்தான் இந்த செயற்பாடுகளிலும் முழுமையாகப் பங்குபற்ற வேண்டும். இது அரசியலில் அக்கறையுடனும் முழுமையான பங்களிப்புடனும் செயற்படுவர்களின் கவனத்திற்குரிய விடயமாகும். ஆனால், இன்று இவ்வாறு செயற்படுகின்றவர்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. மேற்குறிப்பிட்ட அரசியல் அடிப்படையிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அப்பால், புலத்தில் போரின் பின் வாழ்கின்ற மனிதர்களின் நாளாந்த வாழ்வியல் மற்றும் நடைமுறை சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவ்வாறு புலம்பெயர்ந்த சமூகங்கள் பங்களிக்கலாம் என்பதைப்பற்றி சிந்திப்பதும் இன்றைய சூழலில் அவசியமானது. இந்தப் பிரச்சினைகளை, அரசியல் முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம்-தீர்க்கலாமென நம்புகின்றவர்கள் அதைநோக்கி செயற்படட்டும். ஆனால், அவ்வாறான தீர்வு கிடைக்கும் பொழுது மனிதர்கள் வாழ்வதற்கு இங்கு இருப்பார்களா என்பது சந்தேகமே. ஆகவே அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை இவ்வாறான செயற்பாடுகளையும் சமாந்தரமாக முன்னெடுப்பது அவசியமானது.



இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கு மலையகப் பிரதேசங்களில் நாளாந்த வாழ்வியல் மற்றும் நடைமுறை சார்ந்த பிரச்சினைகள் எனும் போது அது பலவகைப்படும். அகதி வாழ்வு, சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமை, காணி இல்லாமை, வாழ்வதற்கு வீடு இல்லாமை. உழைப்பு இல்லாமை, வேலையில்லாமை, உணவில்லாமை, பசி, மதுவிற்கு அடிமையாதல், மனப்பிரழ்வு, மனஅழுத்தம், மனச்சோர்வு மற்றும் குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் எதிர்நோக்குகின்ற பாலியல் அடிப்படையிலான துஷ்பிரயோகங்கள், சுரண்டல்கள், தொழில்கள் எனத் தொடர்கின்றன.

இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக முன்னாட் போராளிகள் அதிலும் குறிப்பாகப் பெண்களும் குழந்தைகளும் பலவகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் பெரும்பாலும் அரைகுறை நிவாரணங்களாக மட்டுமே இருக்கின்றன. இவ்வாறான நிவாரண உதவிகள் தற்காலிகமாகவும் உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதாகவும் மட்டுமே இருக்கின்றன. ஆனால், இதுவே நீண்டகாலத்திற்கு தொடரப்படுமாயின் சமூகத்தில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஏனெனில் இவ்வாறு நிவாரணத்திற்கு பழக்கப்பட்ட மக்கள் மற்றவர்களிடம் கையேந்தி நிற்கின்ற துர்பாக்கியமான பழக்கத்திற்குத் தள்ளப்பட்டுவிடுவார்கள். இவர்கள் தமது சொந்தக்காலில் நிற்பதற்கான முயற்சிகளையோ அதற்கான தன்னம்பிக்கைகளையோ வளர்க்க இது உதவாது. மாறாக ஆரோக்கியமான சமூகங்களாக வளர்வதற்கு தடையாகவே இருக்கும்.

ஆகவேதான் புலத்தில் வாழ்கின்ற, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இவ்வாறான வாழ்வுமுறையை மாற்றுவதில் புலம்பெயர்ந்த மக்களின் பங்கு அளப்பரியது என்றால் மிகையல்ல. அதுவும் போரின்பின் மிகமிக அவசியமானதாக இருக்கின்றன.

மேற்குறிப்பிட்டவற்றில் அகதிவாழ்வில் இருந்து விடுபடுதலுக்கும் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பலுக்கும் மற்றும் காணியில்லாதவர்களுக்கு காணியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மட்டுமே உதவ முடியும். மற்ற பிரச்சினைகளை புலம்பெயர்ந்த சமூகம் அக்கறையுடன் ஒன்றுபட்டு செயற்படுமாயின் ஓரளவாவது தீர்க்கலாம்.

முதலில் மீளக்குடியேறியவர்கள் தமது காணிகளில் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஒழுங்கான சிறு வீடாவது இருப்பது அவசியமானது. இதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாம், பலர் வேலை செய்ய தயாராக இருந்த போதும் அவர்கள் உழைப்பதற்கு எந்தவிதமான தொழிலும் இல்லாது இருக்கின்றனர், ஆகவே பல்வேறு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம்; இவ்வாறான வேலைத் திட்டங்களை உருவாக்கும் பொழுது போரினால் பாதிக்கப்பட்டு தமது அங்கங்களை இழந்தவர்கள் செய்யக்கூடிய வேலைத் திட்டங்களையும் கருத்தில் கொள்வது நல்லது. மேலும் இவர்கள் அவ்வாறான தொழில்களை செய்வதற்கான பயிற்சிகளையும் வழங்க வேண்டியிருப்பதைக் கவனத்திற்கொள்ளவது அவசியமானதாகும்.

போரின் பின் வாழ்கின்ற புதிய இளைய தலமுறையினரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் முக்கியத்துவமானவை. இவர்கள் தாம் எதிர்நோக்கும் வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாது வேலைக்கு செல்கின்றனர். இவ்வாறு வேலைக்கு செல்கின்ற மாணவர்கள் கல்விகற்காமல் இருப்பதற்கும், பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக குடும்பத்தில் நிலவும் வறுமை மற்றும் பெற்றோர்களின் அறியாமை, தாய் தந்தையாருக் கிடையிலான முரண்பாடுகள், குடும்ப வன்முறை, குடிக்கு அடிமையாக இருக்கும் தந்தை, ஆசிரியர்கள் இல்லாமை, பாடசாலைக்கான கட்டடங்கள் இல்லாமை, மற்றும் மாணவர்களுக்கு கற்பதற்கு ஏற்ப வசதிகளில்லாமை, போக்குவரத்து வசதிகளில்லாமை இவ்வாறு எதிர்கொள்ளும் கஷ்டங்களினால், கல்வி கற்கமுடியாமை அல்லது விருப்பமின்மை அல்லது மாணவர்களினது அக்கறையீனம் எனப்பல காரணங்கள் இருக்கின்றன. இதனை நிவர்த்தி செய்வதற்கு முதலாவது. இந்தக் குடும்பங்களின் பொருளாதார தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது. இவ்வாறான பிரச்சினைகள் பெரும்பாலும் கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்களே எதிர்கொள்கின்றனர். நகரப்புறங்களைச் சேர்ந்தவர்களது பிரச்சினைகள் வேறுவகையானவை. இவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் குறைவாக இருப்பினும் சரியான வழிகாட்டல் இல்லாமை முக்கியமான பிரச்சனையாக இருக்கின்றது என தற்போதைக்கு குறிப்பிடலாம். போரின் பின்னரான சூழலில் காணப்படுகின்ற இன்னமொரு முக்கியமான பிரச்சினை பெற்றோர் இல்லாத குழந்தைகள் இப்பொழுது சிறுவர் இல்லங்களில் வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிகமாக இருக்கிறது. மட்டக்களப்பில் மட்டும் 75 இற்கும் மேற்பட்ட சிறுவர் இல்லங்கள் செயற்படுகின்றன. ஒவ்வொன்றிலும் மூன்று நான்கு வயதுகளில் இருந்து 16 வயது வரையிலான குழந்தைகள் குறைந்தது 30 பேர்களாவது இருக்கின்றார்கள்.

மீராபாரதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோக்பால் மசோதாவை வலியுறுத்தி விரைவில் போராட்டம் வெடிக்கும்

(புதுடில்லி)

பலமான லோக்பால் மசோதாவை கொண்டு வரக்கோரும் போராட்டம் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என சமூக சேவகர் அன்னா ஹசாரே கூறியுள்ளார்.

பலமான லோக்பால் மசோதாவை வலியுறுத்தி சமூக சேவகர் அன்னா ஹசாரே தன் ஆதரவாளர்களுடன் சில நாட்களுக்கு முன் டில்லியில் உண்ணாவிரதம் இருந்தார். ஆனால் அவரின் போராட்டத்திற்கு மத்திய அரசு செவி சாய்க்காததாலும் அரசியல் கட்சி ஆரம்பிக்கலாம் என அவரது ஆதரவாளர்



கள் யோசனை கூறியதாலும் போராட்டத்தை பாதியில் கைவிட்டார்.


டில்லி ஜந்தர்மந்தரில் மேற்கொண்ட உண்ணாவிரதத்தால் ஹசாரேயின் உடல் நிலை பலவீனம் அடைந்தது. இதனால் பெங்களூரில் இயற்கை மருத்துவச் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சூழலில் அவர் கூறியுள்ளதாவது, பலமான லோக்பால் மசோதாவை கொண்டு வரக்கோரும் போராட்டம் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும். பலமான லோக்பால் மசோதா வேண்டும் என்ற செய்தியை மக்களுக்கு தெரிவிக்க விரைவில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்வேன். ஜந்தர் மந்தரில் நான் மேற்கொண்ட உண்ணாவிரதம் என் உடல் நிலைய மிகவும் பாதித்து விட்டதால் சிகிச்சை பெற்று வருகின்றேன் என அவர் கூறியுள்ளார். (அ-2)

# சீரடி பாபா பக்தர்கள் வழங்கும் காணிக்கைகள் ஏலம் விடப்படும்

## அறக்கட்டளை நிர்வாகம் தகவல்

(சீரடி)



மகாராஷ்டிர மாநிலம் சீரடியில் அமைந்துள்ள சாய்பாபா கோவிலுக்கு பக்தர்கள் தங்கள் காணிக்கையாக தங்கம், வெள்ளி உள்ளிட்டவற்றை வழங்குகின்றனர்.

காணிக்கையாகப் பெற்ற இந்த தங்கம், வெள்ளி நகைகளை ஏலம் விட கோவில் அறக்கட்டளை முடிவு செய்துள்ளது.

இது குறித்து கோவில் அறக்கட்டளை நிர்வாக அதிகாரி கிஷோர் மோரே கூறுகையில், கோவில் அறக்கட்டளைவசம் 280 கிலோ தங்கமும் 3 ஆயிரம் கிலோ வெள்ளியும் உள்ளன. இதில் 37 கிலோ தங்கமும் 516 கிலோ வெள்ளியும் உருக்குவதற்காக மும்பைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தங்கம், வெள்ளி, வைர நகைகள் அடுத்த மாதம் ஏலம் விடப்படும் என்றார். (அ-2)

# சுரங்க ஊழலுக்கு பொறுப்பேற்று பிரதமர் பதவி விலக வேண்டும்

## பா.ஜ.க.மீண்டும் வலியுறுத்தல்

(போபால்)

நிலக்கரி சுரங்க ஊழலுக்கு பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன்சிங் தன் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்ற எங்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை என பா.ஜ.க. மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் உறுதியாக தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையால் கடந்த வாரம் முழுவதும் பாராளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின.

இந்நிலையில் பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானியின் இணையத்தளத்தில் நேற்று முன்தினம் கூறியிருந்ததாவது,

நிலக்கரி சுரங்க ஊழல் விவகாரத்தில் பா.ஜ.க பிடிவாதமாக இருப்பதாகவும் தேவையில்லாமல் பாராளுமன்றை முடக்குவதாகவும் புகார் கூறுகின்றனர். இந்தப்பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு பா.ஜ. தயாராகவுள்ளது. ஆனால் தனியார் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட



சுரங்க உரிமங்கள் அனைத்தையும் இரத்து செய்ய வேண்டும். நிலக்கரி சுரங்க உரிமங்கள் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன என்பது குறித்து நீதி விசாரணைக்கும் உத்தரவிட வேண்டும். இந்த இரண்டு கோரிக்கையையும் நிறைவேற்றினால் பாராளுமன்றை சுமுகமாக நடத்த அரசுக்கு ஒத்துழைப்பு தர பா.ஜ. தயாராகவுள்ளது என்றார்.

அத்வானியின் இந்த அறிவிப்பால் பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற தங்களின் நிலையில் இருந்து பா.ஜ. மேலிடம் இறங்கி வந்து விட்டதாக தகவல் வெளியானது. ஆனால் பா.ஜ. செய்தி தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் இதை மறுத்துள்ளார்.

அவர் கூறியதாவது,

நிலக்கரித்துறை, பிரதமர் மன்மோகன்சிங்கின் கட்டுப்பாட்டில் இருந்தபோது தான் தனியார் நிறுவனங்களுக்கு சுரங்க உரிமங்கள் அளிக்கப்பட்டன. எனவே இதில் நடந்த ஊழலுக்கு தார்மீக பொறுப்பேற்று பிரதமர் தன் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். எங்களின் இந்த நிலையில் எந்த மாற்றமும் இல்லை. நிலக்கரி சுரங்க ஊழல் குறித்து சி.பி. ஐ.விசாரணையை ஆரம்பித்துள்ளது. முதல் கட்ட விசாரணையில் முறைகேடு நடந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் அந்த முறைகேட்டுக்கு காரணமாக இருந்த பிரதமர் எப்படி தன் பதவியில் தொடர முடியும்.2 ஜி ஸ்பெக்டரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேட்டில் ஐ.மு. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியின் அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர். அதேபோல் நிலக்கரி சுரங்க அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர். அதேபோல் நிலக்கரி சுரங்க ஊழலுக்கு பொறுப்பேற்று பிரதமர் தன் பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டுமல்லவா என்றார். (அ-2)



# பாரதச் செய்தி

# இலங்கை ஜனாதிபதியிடம் வாக்குறுதி பெறுங்கள்

## பா.ம.க.தலைவர் ஜி.கே.மணி

(தூத்துக்குடி)

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கமாட்டார்கள் என்பது குறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மத்திய அரசு உறுதிமொழி பெற வேண்டும் என பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி வலியுறுத்தியுள்ளார்.


அவர் கூறியதாவது,

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது தொடர்கிறது. எதிர்வரும்21 இல் இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதியிடம் மத்திய அரசு உறுதிமொழி பெற வேண் டும்.

தமிழர் பகுதியில் சிங்களவர்களை குடியமர்த்துவதை கைவிட வேண்டும். முள்வேலி முகாம்களில் தமிழர்களை விடுவிக்க வேண்டும். தமிழர்களை சிங்களவர்களோடு இணைத்து கலப்பினம் உருவாக்கக் கூடாது. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்களை மீனவர்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

அனைத்து இனங்களுக்கும் இட ஒதுக்கீட்டின் பலன்கள் கிடைக்க செய்ய வேண்டும்.

பாராளுமன்றத்தை முடக்குவது சரியல்ல. நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு குறித்து விவாதிக்க அக்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்றார். (அ-2)



உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் மத்திய அமைச்சர் ஜெய்ஸ்வால் வீட்டின் முன் மோதலில் ஈடுபட்ட காங்கிரஸ் மற்றும் பா.ஜ.தொண்டர்களை பொலிஸார் கலைப்பதைப் படத்தில் காணலாம்.

# அண்ணாவின் பிறந்த நாள் அ.தி.மு.க.சார்பில் கூட்டங்கள்

(சென்னை)

பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் 104 ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அ.தி.மு.க சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அ.தி.மு.க. அனுப்பியுள்ள அறிக்கையில்,

அண்ணாவின் 104 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மூன்று நாட்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்கள், நகரங்கள் மற்றும் பகுதிகளிலும் கழக அமைப்புக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, புதுடில்லி மற்றும் அந்தமான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொதுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே நடைபெறவுள்ள பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படாத மற்ற இடங்களிலும் புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா மகாராஷ்டிரா, கேரளா, புதுடில்லி மற்றும் அந்தமான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி அன்று ஆங்காங்கே பேறறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவச் சிலைக்கு அல்லது படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி சிறப்பாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

# இந்தியாவரும் வெளிநாட்டவர் தொலைபேசி இணைப்புக்கு புதியவிதி

இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டவருக்கு மூன்று மாதத்துக்கு மேல் கையடக்கத் தொலைபேசி இணைப்பு வழங்கப்படமாட்டாது என புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு சுற்றுலா வரும் வெளிநாட்டவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி இணைப்பு தருவது குறித்து மத்திய தொலைத் தொடர்புத் துறை சமீபத்தில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதுபற்றிய விபரம் வருமாறு, இந்தியாவுக்கு சுற்றுலாவரும் வெளிநாட்டவருக்கு உரிய விசா மற்றும் கடவுச்சீட்டு இல்லாமல் தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்கள் கையடக்கத் தொலைபேசி இணைப்பு வழங்கக்கூடாது. மூன்று மாதத்துக்கு மேல் இந்த இணைப்பை நீடிக்கக் கூடாது. விசா காலத்துக்கு அதிகமாக கையடக்கத் தொலைபேசி இணைப்பு தருவதும் தடை செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டவருக்கு இவ் இணைப்புக்கான சிம்கார்டு வழங்கும் போது விண்ணப்பப்படிவத்தில் அவர் தெரிவித்துள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவையா என்பதை உறுதி செய்த பின்னரே வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

209

## நாட்டார் கதைகள்

## உண்மை நண்பர்கள்

முன்னொரு காலத்தில் ஒரு நரி, ஒரு மரங்கொத்தி, ஒரு மான், ஓர் ஆமை என்பன ஒன்றோடொன்று நட்பாக இருந்தன. அவை ஒன்றையொன்று உண்மையாக நேசித்தன. நால்வருள் எவருக்கு ஆபத்து நேர்ந்தாலும் ஒருவருக்கொருவர் உதவி செய்தல் வேண்டுமென உடன்பாடு செய்திருந்தன.

ஒருநாள் மான் வலையுள் அகப்பட்டுக்கொண்டது. அது நரியை உதவிசெய்யுமாறு கூப்பிட்டது. அந்தவலையின் நார்களைப் பற்களாலே கடித்துக் கிழிக்குமாறு நரியிடம் கூறியது.

நரி தந்திரம் உள்ள மிருகம் அல்லவா? அது மானிடம் நண்பனே நீ நன்றாய்க் கால்களை அடித்து முயற்சி செய்; அப்படிச் செய்தால் வலையின் கண்ணிகள் அறுந்துவிடும் என்று புத்தி கூறியது. மான் அவ்வாறு செய்தால் வலை நன்றாய் மானை நெரித்துக் கொன்றுவிடும்.

பின்புதான் மானின் இறைச்சியை இலகுவாகத் தின்னலாம் என்று நரி நினைத்தது. நரி அவ்வாறு சொல்லி விட்டுப் பக்கத்தில் இருந்த பற்றையுள் மறைந்திருந்து மானுக்கு நேரப் போவதனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், நரியின் எண்ணம் மானுக்கு விளங்கிவிட்டது. எனவே, அது நரியின் புத்திமதியின் படி நடக்கவில்லை.

இந்தநேரத்தில் மரங்கொத்தியும் ஆமையும் தங்கள் நண்பர்களைத் தேடத் தொடங்கின. அவை வலையில் அகப்பட்டிருந்த மானைக்கண்டன. அவற்றுள் ஒன்று மானைப்பார்த்து, நரி எங்கே? ஏன் அந்த நரி வாக்குப் பண்ணியவாறு உன்னைக் காப்பாற்ற வரவில்லை? என்று கேட்டது.

அதற்கு மான், இந்த வலையை அறுக்கமுயலும்படி நரி கூறியது என்று பதில் சொன்னது. எனக்கு நரியின் தந்திரம் தெரியும். அதனுடைய புத்திமதிப்படி நடந்தால் வலையின் வாரில் நன்றாக அகப்பட்டுச் சாக வேண்டியதுதான். நானும் நரிக்கு நல்ல இரையாக வேண்டியதுதான். இதை அறிந்துதான் நான் நரியின் புத்திமதிப்படி நடக்கவில்லை? என்று மான் கூறியது.

இதைக்கேட்ட மரங்கொத்தி உடனே ஆமையிடம் வலையைக்கடித்து வெட்டும்படி கூறியது. இவ்வாறு கூறிவிட்டு மரங்கொத்தி ஊருக்குள் விரைந்து சென்று அங்கே காத்திருந்தது.



காலை நேரமானது. மரங்கொத்தி வலைச் சொந்தக்காரனாகிய வேடனின் வீட்டுக்குப் பறந்து சென்றது. அது அவனது வீட்டுக்கூரையிலே தங்கியிருந்தது. வீட்டிலிருந்த வேடன் வலையில் மான் அகப்பட்டிருக்கிறதா என்று பார்த்துவரப் புறப்பட்டான். அப்போது மரங்கொத்தி வீட்டுக்குள் பறந்துசென்று வேடனின் தலையை தனது கால்களாலே பற்றிப் பிடித்துக்கொண்டது.

இதைக்கண்டு வேடன் திடுக்கிட்டுப் பயந்தான். அந்நிகழ்ச்சி ஒரு அபசகுனம் ஆயிற்றே என்று அவன் நினைத்தான். மரங்கொத்தி வீட்டுள் நுழைவது அபசகுனம் என்பது பண்டைய வழக்கமாகும். அதனால் வீட்டுக்காரனுக்கு ஏதாவது தீங்கு நேரும் என்றும் நம்பப்பட்டு வந்தது. விசேடமாக வீட்டுக்காரர் வீட்டை விட்டு வெளியே சென் றால் அத்தீங்கு சம்பவிக்கும். ஆகவே, வேடன் வெளியே சென்று வலையைப் பரீட்சிப்பதை விட்டு வீட்டிலேயே தங்கிவிட்டான்.

ஆமை வலையின் வார் கயிறுகளை வாயால் நன்னி நன்னிக் கடித்தது. அது அதனுடைய முரசிலிருந்து இரத்தம் வடியும் வரை கடித்தது. அதற்கு வாயிலே தாங்கமுடியாத வேதனை உண்டானது. ஆனாலும் அது வெட்டுவதை நிறுத்தவில்லை. அது தன்னால் இயன்றளவு தனது நண்பனின் உயிரைக் காப்பாற்ற முயன்றது.

காலையில் நேரம் கழிந்தது. வேடன் அசுபவேளை முடிந்தது என்று நினைத்தான். ஆகவே, அவன் வீட்டை விட்டு வெளியேறி காட்டை நோக்கிச் சென்றான்.

அவன் ஊரைக் கடந்து சென்று கொண்டிருந்த போது மரங்கொத்தி மீண்டும் பறந்து சென்று அவனுடைய தலையைப் பற்றிக்கொண்டது. இச் சம்பவத்தால் வேடன் தனது மனதை மாற்றிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

இவை இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில் ஆமை வலையின் வாரை வெட்டிக் கொண்டே யிருந்தது.

சிறிது நேரம் சென்றபின் மீண்டும் ஒருமுறை வேடன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். இம்முறை மிக வேகமாக நடந்தான். வேடன் வலைக்கயிறு இருந்த இடத்தை அண்மிய போது ஆமை வலையை அறுத்து முடித்தது. அது மானை விடுவித்தது.

மான் எழுந்து நரி ஒளிந்திருந்த இடத்தை நோக்கி விரைவாக ஓடியது. வேடன் கையில் இருந்த கூரான கத்தியை மான் மேல் வீசினான். அக்கத்தி இலக்குத்தவறி நரியின் கழுத்திலே பாய்ந்தது. நரி உடனே விழுந்து இறந்தது. வலைக்குப் பக்கத்திலே ஆமை இறந்தது போலப் பாசாங்கு செய்து கொண்டு கிடந்தது. அவன் ஆமையைத் தூக்கித் தனது பைக்குள் போட்டுக் கொண்டான்.

இந்த நேரத்தில் மான், ஆமையின் கதியைப்பற்றி எண்ணிப்பார்த்தது. உடன் ஆமையைத் தேடிக்கொண்டு திரும்பி வந்தது. அது, வேடன் ஆமையைப் பையொன்றுக்குள் போட்டு மரத்திலே தூக்கி யிருப்பதைக் கண்டது. அக்கணமே, மான் செயலில் இறங்கத் துணிந்தது.

மான் தனது கொம்புகளை உயர்த்தியவாறே மரத்தடிக்கு ஓடியது. மரத்திலே தொங்கிய பையைத் தனது கொம்புகளாற் கொளுவித் தூக்கிக்கொண்டு காட்டுக்குள் விரைவாக ஓடிச் சென்று விட்டது. இவ்வாறு மான் ஆமைக்குப் பதில் உபகாரம் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுக்கும் தி.மு.க வுக்கும் கருத்து வேறுபாடு இருந்ததில்லை

## கருணாநிதி கூறுகிறார்

பழ. நெடுமாறனின் பேச்சுக்கு பதிலடியாக விடுதலைப்புலிகளோடு தி.மு.க.வுக்கு கருத்து வேறுபாடு இருந்தது இல்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

ஆளுங்கட்சியோடு இணைந்து பயன் பெற வேண்டும் என்பதே பழ. நெடுமாறனின் குறிக்கோளாக இருக்கின்றது.

அதற்காக தி.மு.க.வைத் தாக்கினால் அ.தி.மு.க.வில இடம் கிடைக்கும் என்று நெடுமாறன் கருதுகிறார்.

கடந்த 1984 ஆம் ஆண்டு ஈழப்போராளிகள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் எம்.ஜி.ஆர். ஈடுபட்டதாகவும், அந்த முயற்சியை முறியடிக்கும் செயலில் கருணாநிதி ஈடுபட்டதாகவும் நெடுமாறன் கூறியுள்ளார்.

ஈழப்போராளிகளிடையே சகோதரச்சண்டையைத் தொடங்கி வைத்தது கருணாநிதிதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

உண்மையில் சகோதர யுத்தத்தைத் தூண்டிவிட்டது பழ.நெடுமாறன் போன்றோர்தான். இதனைப் போராளி இயக்கங்களைச் சேர்ந்தவர்களே நன்கு உணர்வர்.

நெடுமாறன் வாதப்படி ஈழப்போராளி இயக்கங்களை நான்தான் தூண்டிவிட்டேன் என்று ஒரு வாதத்திற்கு ஒப்புக்கொள்கிறேன்.

அப்படியிருக்கையில் கடந்த 1985ஆம் ஆண்டு என் தலைமையில் உருவான டெசோ அமைப்பில் ஒரு முக்கிய உறுப்பினராக நெடுமாறன் சேர்ந்தது ஏன்?

கடந்த 1985 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி நெடுமாறன் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், டெசொ இயக்கத்தை மேலும் வளருங்கள். ஏனெனில் தமிழீழம் காணப்போராடும் டெசோ இயக்கத்தைத் தவிர உற்ற துணைவன் வேறு யாருமில்லை என்று எழுதியிருந்தார்.

ஈழப்போராளிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் எம்.ஜி.ஆர். ஈடுபட்டார் என்றால், நெடுமாறன் எனக்கு எழுதிய கடிதம் கற்பனையானதா?

விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆரம்பம் முதலே நான் நடந்துகொண்டேன் என்றும் நெடுமாறன் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதற்கு எனக்கு முதுகெலும்பு இல்லை என்று நெடுமாறன் கூறுகிறார். எனக்கு முதுகெலும்பு இருக்கிறதா இல்லையா என்பதைத் தமிழக மக்கள் அறிவர். என்னை இவ்வாறு அர்ச்சனை செய்யும் நெடுமாறன் முதுகெலும்பு எப்படியெல்லாம் வளையக்



கூடியது என்பதையும் மக்கள் அறிவர் என்று கருணாநிதி தனது அறிக்கையில் கூறியுள்ளார். (அ-2)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப்பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு பிரதேச ஒருங் கிணைப்புக்குழு தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்டின் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே தொடர்புடைய சகல அரச,அரசசார்பற்ற நிறுவனங்களும் தவறாது சமுகமளிக்குமாறு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.கிருஸ்ணராசன் அறிவித்துள்ளார். (அ-2)

## பெண் தூக்கிட்டு தற்கொலை

சிலாபம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் தற்கொலை செய்து உயிரிழந்துள்ளார்.

அவசர சிகிச்சைப்பிரிவில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட இவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வைத்தியசாலையிலுள்ள கழிவறையில் தூக்கிட்டு உயிரிழந்த இவரது சடலத்தை வைத்தியசாலை ஊழியர்கள் கண்டுபிடித்துள்ளனர். உயிரிழந்தவர் 40 வயதான ஒருவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# புலிகளின் நீர்மூழ்கிக்கப்பல் பொது மக்கள் பார்வைக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மிகப் பிரமாண்டமானளவில் கட்டமைக்கப்பட்டு வந்த நீர்மூழ்கிக் கப்பலின் கட்டுமானங்களையும் கப்பலை சோதனையிடுவதற்கான புலிகள் அமைந்திருந்த நீர்த்தடாகத்தையும் படையினர் தற்போது பொதுமக்களின் பார்வைக்காக வைத்துள்ளனர்.

இரட்டை வாய்க்கால் சந்தியிலிருந்து மாத்தளன் வைத்தியசாலை நோக்கிச் செல்லும் வீதியில் கடற்படையை அண்டிய இரகசிய இடத்தில் இந்த கட்டுமானப் பணிகள் இடம் பெற்றிருக்கின்றன. மேலும் இந்த கப்பலை சோதிப்பதற்கான தடாகமும் பிரமாண்டமானளவில் அமைந்துள்ளது.

இதனோடு அந்த இடத்தில் குறித்த கப்பலுக்குள் பொருத்துவதற்கான புலிகள் எடுத்து வந்திருந்த மிகப்பெரிய இயந்திரங்கள் சிலவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நீர்மூழ்கிக் கப்பலை தாங்கிச் செல்வதற்கான வாகனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவையனைத்தும் தற்போது காட்சிப் படுத்தப்பட்டுள்ள நிலையில் வடக்கிற்குப் படையெடுக்கும் பெருமளவு சிங்கள மக்கள் இதனைத்தொடர்ந்து பார்வையிட்டு வருகின்றனர். (அ-2)

# இவ்வருடத்தின் எட்டு மாதங்களில் மட்டும் 404 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## மதுவரி நிலையம் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த எட்டுமாதகாலப் பகுதிக்குள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட 404 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு சுமார் 12 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மதுவரி நிலைய கட்டுப்பாட்டு அதிகாரி என். கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் சட்டவிரோத மதுபான உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டபோதும் தீவகப்பகுதிகளில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் அரச சாராயத்தை அனுமதிப் பத்திரமின்றி விற்பனை செய்த விற்பனையாளர்கள், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைப்பொருள் விற்பனை செய்தவர்கள், சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்தவர்கள் யாழ். மதுவரி நிலைய உத்தியோகத்தரின் தேடுதல் நடவடிக்கைகளின் போது இனம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம், அரியாலை, நல்லூர், கல்வியங்காடு, ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணை ஆகிய பிரதேசங்களில் மதுவரித் திணைக்களத்தின் சட்டக்கோவைகளுக்கப்பால் மது மற்றும் சிகரெட் விற்பனைகள் அதிகம் இடம் பெறுகின்றன.

எனினும் மதுவரி நிலைய உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்ட பிரதேசங்களிலிருந்து கடந்த 8 மாத காலப்பகுதிக்குள் 404 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த மாதம் மட்டும் 49 பேர் கைது செய்யப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# தமிழ் படித்த பட்டதாரிகள் குறைந்தளவிலேயே உள்ளனர்

## பேராசிரியர் சண்முகதாஸ் வருத்தம்

இலங்கையில் தமிழ்மொழிப் பயன்பாடு குறைந்து கொண்டு [illegible]கிறது. தமிழ் படித்த பட்டதாரிகள் மிகக் குறைந்தளவிலேயே உள்ளனர். அவர்களும் உயர்தர மாணவர்களுக்கு தமிழைக் கற்பிக்க தயக்கம் காட்டுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள பாரதி விழா தொடர்பில் நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் சிங்கைப் பரராஜசேகரனும் சிங்கை செகராசசேகரனும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சங்கம் நிறுவி தமிழை வளர்த்தும் தமிழ்க் கல்வியைப் பரப்பியும் வந்தனர். பின்னர் நூலகங்களும் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்த கோவில்களும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டன. இதனால் போர்த்துக்கேயர் காலத்தில் தமிழ்க் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையை அடைந்திருந்தது. பின்னர் ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் ஈழநாட்டில் தமிழ்க் கல்வி மீண்டும் வளர்ச்சியடையலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் உச்ச நிலையை அடைந்திருந்தது. தமிழ் பேசும் உலகெல்லாம் போற்றும் புலவர்கள் பெருவாரி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இக்காலத்தில் த.கைலாசபிள்ளை யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கத்தை 1900 ஆம் ஆண்டு நிறுவினார். இச்சங்கத்தில் கொக்குவில் சி.சபாரத்தின முதலியார் செயலாளராகவும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் தலைமைத்தேர்வாளராகவும் மற்றும் சிறப்பு ஆலோசகராகவும் பணியாற்றினர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே உருவாக்கப்பட்ட தமிழ்ச் சங்கமும் பின்னர் வலுவிழந்து போயிற்று. கொழும்பு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலே தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ்ப்பாணத்திலே ஒரு தமிழ்ச் சங்கம் ஏன் அமைக்கப்படவில்லை என பலர் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சங்கம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தின்ஊடாகமொழி, பண்பாடு தொடர்பான பாரிய பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழ்ச் சங்கத்தின் தேவை தற்போது உணரப்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடே இந்தச் சங்கத்தின் தோற்றத்திற்கு காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



தெய்வப்புகழிசை வாரிதி நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் எழுதிய நல்லூர் கந்தன் கழற்கோர் கவிமாலை வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கவிஞருக்கு எஸ். வெற்றிவேலாயுதம் மலர் மாலை அணிவிப்பதையும், அடியார்க்கு அமுதூட்டும் அண்ணல் கே.கே.கே. சிவபாலன், [illegible] ஆறு.திருமுருகன் ஆகியோர் அருகில் நிற்பதையும் கவிஞருக்கு சின்மயாமிஷன் சுவாமிகள் [illegible] படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மீது போர் தொடுத்த புஷ்சை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துங்கள்

## பாதிரியார் டெஸ்மண்ட்டுட்டு வலியுறுத்தல்

(லண்டன்)

தென்னாபிரிக்காவில் இனவெறி ஆட்சியை எதிர்த்து போராடியவர் பாதிரியார் டெஸ்மண்ட் டுட்டு இனவெறிக்கு எதிராக போராடியதற்காக 1984 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

ஈராக் மீது போர் தொடுத்ததற்காக அவர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனி பிளேர் ஆகியோரை கடுமையாக விமர்சித்து உள்ளார். அவர் கூறியிருப்பவை வருமாறு,

ஈராக்கில் மனித பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக ஜோர்ஜ் புஷ்சும் டோனி பிளேரும் பொய் கூறி ஈராக் மீது போர் தொடுத்து விட்டனர். இதற்கு முன்னர் சரித்திரத்தில் நடந்த ஏனைய போர்களை விட ஈராக் போர்தான் உலகை மிகவும் மோசமாக ஸ்திரமற்ற நிலைக்கு தள்ளியது.

சிரியாவில் ஏற்பட்டிருக்கும் உள்நாட்டு போர் மற்றும் ஈரானை மையமாக கொண்டு மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றம் ஆகியவையும் கூட ஈராக் மீது அமெரிக்கா இங்கிலாந்து போர் தொடுத்ததுதான் காரணம். இந்த குற்றங்களை செய்த ஜோர்ஜ் புஷ், டோனி பிளேர் இருவரையும் சர்வதேச நீதிமன்ற கூண்டில் ஏற்றி விசாரிக்க வேண்டும்.

இரு தலைவர்களும் தாங்கள் அடாவடித் தனங்களை செய்வதற்காக பொய்யான காரணங்களை தாங்களே உருவாக்கி சொன்னார்கள். மக்கள் பிளவுபடவும் வழி செய்து விட்டார்கள் என அவர் கூறினார்.

இதேவேளை பாதிரியார் டெஸ்மண்ட்டுட்டுக்கு டோனி பிளேர் பதில் அளித்து உள்ளார். அவர் கூறியிருப்பதாவது,

நாங்கள் பொய் சொன்னோம் என்று கூறுகின்ற அந்த பழைய அடிப்படையில்லாத வாதம் தவறானது. இது குறித்து பல தடவைகள் விவாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இப்போது அது குறித்து புதிதாக கூறுவதற்கு எதுவும் கிடையாது அத்துடன் பிரச்சினைகள் பல இருக்கின்ற போதிலும் ஈராக் தற்போது 3 மடங்கு பெரிதான பொருளாதாரத்தை பெற்றிருப்பதுடன் அங்கு குழந்தைகளின் இறப்பு வீதமும் மூன்றில் ஒரு மடங்காக குறைந்திருக்கிறது. பஸ்ரா போன்ற இடங்களில் முதலீடுகள் பெரிதும் அதிகரித்திருக்கின்றன என அவர் கூறினார். (அ-2)

## 2 ஆம் உலகப்போர் வெடிபொருட்கள் இத்தாலியில் கண்டுபிடிப்பு

(லண்டன்)

இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்திய வெடிகுண்டுகள் இத்தாலியின் ட்ரென்டினோ என்ற மாகாணத்தில் அகோ டி நாட்டிஸ் என்ற பகுதியில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 3 ஆயிரத்து 200 மீற்றர் பரப்பளவில் 200 இற்கும் மேற்பட்ட வெடிபொருட்கள் பரவி கிடப்பதாகவும் அதனை பாதுகாப்பாக செயலிழக்கும் பணியில் வெடி பொருள் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆப்கான் வீரர்களுக்கு பயிற்சி; அமெரிக்கா நிறுத்தி வைப்பு

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் இராணுவத்தில் புதிதாகச் சேரும் வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதை அமெரிக்க சிறப்புப் படையின் தளபதி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படையினர் மீது ஆப்கான் இராணுவ வீரர்களே தாக்குதல் நடத்துவது சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் நடைபெற்ற இவ்வகைத்தாக்குதல்களில் 45 நேட்டோ வீரர்கள் உயிரிழந்தனர்.

படைத்தளத்தில் மூன்று அவுஸ்திரேலிய வீரர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது அவர்களை நோக்கி ஆப்கான் இராணுவ உடை அணிந்திருந்த ஒரு நபர் மிக அருகில் இருந்து சுட்டதில் அவர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் இராணுவத்தில் புதிதாகச்சேரும் வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதை அமெரிக்க சிறப்புப் படையின் தளபதி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

இது குறித்து அமெரிக்க சிறப்புப் படையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், புதிய வீரர்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறோம்.


பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய வீரர்கள் நீக்கப்பட்ட பின்னரே பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவித்தார். (அ-2)

உலக தரிசனம்

# தூதரக கார் மீது வெடிகுண்டு நிரப்பிய கார் மோதியது

## மூவர் உடல் சிதறி பலி

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் ஆப்டரா சாலையில் ஐ.நா. அகதிகளுக்கான தூதரகமும் அமெரிக்கத் தூதர் அலுவலகமும் உள்ளன. நேற்றுக்காலை அமெரிக்க தூதரக அலுவலக கார் ஒன்று தூதரகத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது வெடிகுண்டுகள் நிரப்பிய கார் ஒன்று அமெரிக்க தூதரக கார் மீது வேகமாக மோதியது.

இதில் வெடிகுண்டுகள் நிரப்பிய கார் வெடித்து சிதறியது. அமெரிக்க தூதரக காரும் பலத்த சேதம் அடைந்தது. இந்த குண்டு வெடிப்பில் 3 பேர் உடல் சிதறி பலியானார்கள். வெளிநாட்டினர் உட்பட 12 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலியானவர்களில் ஒருவர் வெளிநாட்டை சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. ஆனால், இது உறுதிப்படுத்தப்படவில்லை. வெடிகுண்டு கார் தாக்குதலை தொடர்ந்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)



ஈரான் நாட்டில் நடைபெற்ற அணி சேரா மாநாட்டில் கலந்து கொண்ட சிரிய பிரதமர் வேயல்நாடெர் அல் ஹல்கி (இடது) ஈரானின் மூத்த தலைவர் அயத்துல்லா கொமேனியை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பிரிட்டனின் முன்னாள் பிரதமரின் உடைகள் ஏலத்துக்கு வருகின்றன



பிரிட்டனின் முன்னாள் பிரதமர் மார்க்ரெட் தாட்சரின் உடைகளை ஏலம் விட முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிரிட்டனில் கடந்த 1975 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்தவர் மார்க்ரெட் தாட்சர். கடந்த 1975 ஆம் ஆண்டு கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து பிரதமராக பதவியேற்ற ஆரம்ப காலம் வரை அவர் பயன்படுத்திய ஆடைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவைகள் ஒவ்வொன்றிற்கும் 83 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் வரை ஏலம் விட நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதன்முதலாக இவரின் உடைகள் ஏலம் விடப்படுவதால் தற்போதிலிருந்த கிராக்கி அதிகரித்துள்ளது. (அ-2)

# தங்கத் திருட்டு கும்பல் தாக்குதலில் ஆதிவாசிகள் 80 பேர் கொலை

(கராகஸ்)

தென் அமெரிக்க நாடான வெனிசுவேலா நாட்டின் காட்டுப்பகுதியில் யனோமாமி என்னும் காட்டுவாசி மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு சட்டவிரோதமாக தங்கத்தை திருடன் கும்பல் ஒன்று உலங்குவானூர்தியில் ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளில் போய் இறங்கியது. பின்னர் அவர்களுக்கு இடையூறாக இருந்த ஆதிவாசி மக்களின் குடிசைகளை எரித்து கொளுத்தியிருக்கின்றனர். அதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 80 பேர் இறந்துள்ளனர்.

சமீபத்தில் ஆதிவாசிகள் பற்றி கணக்கெடுக்கச்சென்ற அதிகாரிகளுக்கு இந்த அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது. இது குறித்து எந்த தடயங்களும் எங்களுக்கு சிக்கவில்லை என்று அரசுத்தரப்பில் கூறப்படுகிறது. இது போன்ற சட்டவிரோத கும்பலால் தொடர்ந்து தாக்கப்படுவதாக கூறி வரும் அந்த ஆதிவாசி மக்களின் குற்றச்சாட்டுக்களை அரசு ஏற்றுக் கொள்வதில்லை என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-2)

# பாதுகாப்பு வசதி இல்லாத சுரங்கங்களை மூடுகிறது சீனா

(பீஜிங்)

போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாத நூற்றுக்கணக்கான சுரங்கங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் மூட சீனா முடிவு செய்துள்ளது.

சீனாவில் மொத்தம் உள்ள 12 ஆயிரம் நிலக்கரி சுரங்கங்களில் 85 சதவீதம் சிறிய ரக சுரங்கங்கள். இந்த சிறிய சுரங்கங்களில் போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாததால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. ஒவ்வொரு 10 கோடி தொன் நிலக்கரி உற்பத்தி செய்யும் போதும் 38 தொழிலாளர்கள் பலியாகின்றனர்.

நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள சிச்சுவான், யுனான், குய்ஷு மாகாணங்களில் உள்ள சிறிய சுரங்கங்களில் தான் அடிக்கடி விபத்துகள் நடக்கின்றன. சிச்சுவான் மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த வெடி விபத்தில் 43 பேர் உயிரிழந்தனர். 54 பேர் காயமடைந்தனர். இதில் 17 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும் என்ற அரசின் உத்தரவை சிறிய சுரங்கங்கள் பின்பற்றுவதில்லை. எனவே, போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாத நூற்றுக்கும் மேற்பட்ட சுரங்கங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் மூட அரசு முடிவு செய்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு நன்மை செய்வதே உயரிய தர்மம்.
– சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சம்பிரதாய சடங்குகளாகிவிட்ட மனிதநேயப் பண்பாடுகள்

தமிழ் மக்களின் வாழ்வு, அவர்களின் பண்பாட்டுக் கோலங்கள் என அத்தனையும் மனிதநேயத்துடன் சம்பந்தப்பட்டது.

விருந்தோம்பல் பண்பாடு தொடக்கம் இன்சொல் உரைத்தல் வரை அனைத்தும் மற்றவர்களை மனம்நோகாமல்–மற்றவர்கள் துன்பப்படாமல் மகிழ்வாக இருத்தலின் பொருட்டு வகுக்கப்பட்டவை.

ஆலயங்களில் நடைபெறும் பூசை வழிபாடுகள், நைவேத்தியங்கள் என்பன மக்களின் அடிப்படைத் தேவைக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்குமானவை.

இலட்சோபலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து சித்திரத் தேர் செய்து அதில் தெய்வ விக்கிரகங்களை வைத்து ஊர் கூடித் தேர் இழுப்பதன் அடிப்படை இன, மத, சாதிய வேறுபாடுகள் அற்ற சமூக ஒற்றுமையை நோக்காகக் கொண்ட செயற்பாடாகும்.

ஆலயங்களில் நடைபெறும் அன்னதானம் எல்லோரும் சமமானவர்கள் என்ற உயர்ந்த நோக்கை வலியுறுத்தும் வகையில் கூடியிருந்து உணவருந்தி மனிதத்தை மதிக்கும் ஏற்பாடாகும்.

எங்கள் தமிழினத்தின் வாழ்வியல் கோலங்களின் அர்த்தப்பாடுகள் இதுவாக இருக்கையில், சம காலத்தில் அவற்றுக்கான கற்பிதங்கள் வேறுவிதமாக அமைந்துவிட்டன.

ஆலயம் ஒன்றில் அன்னதானத்தில் பங்கேற்கச் சென்ற அடியவர் ஒருவர், சனநெரிசலில் அகப்பட்டபோது,நெருக்கடியைக் கட்டுப்படுத்த கொட்டன் பொல்லால் அடித்ததில் அந்த அடியவரின் தலை வெடித்துக் கொண்டது.

இதுதவிர, ஆலயங்களில் காட்டப்படும் சண்டித்தனங்கள் நாம் எங்கு நிற்கிறோம் என்பதையே மறக்கச் செய்துவிடுகிறது.

ஆக, எத்தகைய உயரிய நோக்கங்களின் பொருட்டு தமிழ் பண்பாடுகள் வகுக்கப்பட்டனவோ அவை அனைத்தும் நோக்கம் இழந்து வெறும் சம்பிரதாய சடங்குகளாக மாறிவிட்டதை உணர முடிகின்றது.

அன்னதான மண்டபத்தில் உணவருந்தச் சென்றவருக்கு கபாலத்தில் விழுந்த அடி தனித்து அவருக்கானது மட்டுமல்ல, தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்பாட்டின் உச்சியில் விழுந்த பேரிடி என்று கூறிக் கொள்ளலாம்.

என்ன செய்வது! அமுதூட்டும் பெரும் புண்ணியம் செய்கின்றோம் என்ற தத்துவம் உணராதார் உணவு கொடுக்க நினைத்தால் உணவோடு உதையும் விழத்தான் செய்யும் என்ற உண்மை புரிதற்குரியது.

# 2011ஆம் ஆண்டுக்கான விருதைப்பெறும் நூல்கள்

இலங்கை இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டிற்கான இலக்கிய நூல்களிலே விருதுபெறும் நூல்களினதும் சான்றிதழ் பெறும் நூல்களினதும் விபரங்களை இலக்கியப் பேரவையின் செயலாளர் சி.சிவதாசன் அறிவித்துள்ளார்.

ஆய்வு நூலுக்கான விருது என்.கே.எஸ். திருச்செல்வம் எழுதிய **தென்னிலங்கையின் புராதன கோயில்கள்** எனும் நூலுக்கும், சான்றிதழ் கலாஜோதி மௌலவி காத்தான்குடி பௌஸ் எழுதிய **எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசை ஞானம்** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

காவிய நூலுக்கான விருது கொழும்பு காப்பியக்கோ ஜின்னாஹ் ஹரிபுத்தீன் எழுதிய **வாத்தியார் மாப்பிள்ளை** எனும் நூலுக்கும், சான்றிதழ் பாலமுனை பாறூக் எழுதிய **தோட்டுப்பாய் மூத்தம்மா** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

கவிதை நூலுக்கான விருது முல்லைத்தீவு கி.பி.நிதுன் எழுதிய **துயரக் கடல்** எனும் நூலுக்கும் , சான்றிதழ் திருமலை பெரிய ஐங்கரன் எழுதிய **கறுப்பு மழை** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

நாவலுக்கான விருது மன்னார், பேசாலை எஸ்.ஏ.உதயன் எழுதிய **சொடுதா** எனும் நூலுக்கும், சான்றிழ் வவுனியா அகளங்கன் எழுதிய **அலைக் குமிழ்** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

சிறுகதை நூலுக்கான விருது கொழும்பு சந்திரகாந்தா முருகானந்தன் எழுதிய **அனுசுயாவின் கரடி பொம்மை** எனும் நூலுக்கும், சான்றிதழ் சாவகச்சேரி தாட்சாயணி எழுதிய **அங்கயற் கன்னியும் அவள் அழகிய உலகமும்** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

சிறுவர் இலக்கிய நூலுக்கான விருது திருமலை கலாபூஷணம் கேணிப்பித்தன் எழுதிய **சந்திரன் கதை** எனும் நூலுக்கும், சான்றிதழ் காத்தான்குடி எம்.எஸ்.எம்.நுஸைர் எழுதிய **படைப்புக்கள் மூலம் அல்லாஹ்வை அறிவோம்** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

சமய நூலுக்கான விருது கோப் பாய் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழு திய **முன்னோர் சொன்ன கதைகள்** எனும் நூலுக்கும், சான்றிதழ் கோப்பாய் தமிழறிஞர் கே.வி.குணசேகரன் எழுதிய **ஸ்ரீமத் பகவத்கீதை சுலோகம், உரை விளக்கம், கதைகள்** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

மொழிபெயர்ப்பு நூலுக்கான விருது திக்குவல்லை கமால் எழுதிய **முல்லைத் தீவு தாத்தா** எனும் நூலுக்கும், சான்றிதழ் கெகிறாவ ஸீலைஹா எழுதிய **இந்த நிலம் எனது** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது.

அறிவியல் நூலுக்கான விருது நல்லூர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு எழுதிய **எண்ணங்களும் வண்ணங்களும்** எனும் நூலுக்கும் பல்துறை நூலுக்கான விருது தெஹிவளை கே.எஸ். பாலச்சந்திரன் எழுதிய **நேற்றுப் போல இருக்கிறது** எனும் நூலுக்கும் நாடகம் நூலுக்கான விருது யாழ்ப்பாணம் கலையார்வன் (கு.இராயப்பு) எழுதிய **குறுங்கூத்துக்கள் (ஐந்து தென்மோடிக்கூத்துக்கள்)** எனும் நூலுக்கும் கிடைத்துள்ளது. (அ-9)

## மின்சாரம் வழங்கல் குறித்த கலந்துரையாடல்

(சிவநகர்)

வடக்கின் வசந்தம் மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராமங்களை இனம்காணும் கலந்துரையாடல் கூட்டம் நேற்று திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

தற்போது மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ள நிலையில் வேலைகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பள்ளிக்குடா, செம்பன்குன்று தெளிகரை, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரத்திநகர், புலோப்பளை அரசன் குடியிருப்பு, கோவில்வயல், கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உருத்திரபுரம் கிழக்கு,மேற்கு, வடக்கு பிரிவுகள், சிவநகர், புதுமுறிப்பு,திருவையாறு, மலையாளபுரம் ஆகிய இடங்களும் கண்டாவளையிலுள்ள இனங்காணப்பட்ட கிராமங்களும் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் த.குணசீலன், வடக்கின் வசந்தம் பொறியியலாளர் பிரசாத், கிளி.மின்சாரசபை மின் அத்தியட்சகர் குகராஜ் மற்றும் அனைத்துக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (அ-3-254)

## உதைபந்தாட்டப்போட்டி அடிதடியில் முடிபடைந்தது

(கரவெட்டி)

மானிப்பாய் அட்டகிரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் உதைபந்தாட்ட ரசிகர்களின் அடிதடியினால் நிகழ்வு முற்றாக பாதிக்கப்பட்டதுடன் போட்டியைக் காணவந்த பெரும் திரளான மக்கள் நாலாபக்கமும் சிதறியோடினர்.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டி சபவ தினம் பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் அட்டகிரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்கென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

இதனை ஏற்றுக்கொள்ளாத நாவாந்துறை சென்.மேரிஸ் ரசிகர்கள் தமது வீரர்களைத் தாக்கியதுடன் இதனைத் தடுக்க முற்பட்ட போட்டி ஏற்பாட்டாளர்களையும் தாக்கியதையடுத்தே கைகலப்பு முற்றியதால் இளவாலை யங்கென்றிஸ் வீரர்களையும் தாக்கினர்.

இதனால் பெரும் கலகம் ஏற்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த இராணுவம், பொலிஸார் அமைதி நிலையைக் கொண்டு வந்தனர்.

அங்கு வந்த பெரும்பாலான ரசிகர்கள் மதுபோதையில் நின்றதாலேயே இக் கைகலப்பு ஏற்பட்டதென போட்டியை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (அ-3-24)

## பொலிஸாரின் இரத்ததான முகாம்

(முல்லைத்தீவு)

146ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு பொலிஸார் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லை.மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கவுள்ளனர் என முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் ஜனககுலதிலக தெரிவித்துள்ளார்.

இதில் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு ஆகிய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 30 பொலிஸார் இரத்ததானம் வழங்கவுள்ளனர். (அ-3-267)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கடவுளுக்கு நெருக்கமானவர்



வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும் அடுத்தபடியாய் இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.

புகழ்ச்சியையும் அவமதிப்பையும் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய்யும் தியாகமே சிறந்த தியாகம் .

தன்னை அடக்கப்பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே வாழத்தகுதியுள்ளவன்.

நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது முதற்கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.

உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். தூய்மை உடையவன்தான் கடவுளுக்கு மிக நெருக்கமானவன் ஆகிறான்.

உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள். பணம் சக்தியல்ல. நன்மையும் தெய்வ பக்தியுமே சக்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமகள் உதைபந்தாட்டத் தொடர் யங்கென்றிஸ் சம்பியன்


(வேலணை)

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய 7 பேர் பங்குபெறும் விலகல் முறையிலான சுற்றுப்போட்டித் தொடரின் சம்பியனாக இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் தெரிவாகியுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி அட்டகிரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. பரபரப்பான இவ்விறுதிப் போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோள்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. யங்கென்றிஸ் சார்பாக மூன்று கோல்களை அடித்து அசத்திய ஞானம் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். தொடரின் ஆட்டநாயகனாக சென்.மேரிஸ் அணியின் ஜெராட் தெரிவானார். மூன்றாமிடத்துக்கான போட்டி நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணிக்கும் இளவாலை சென்லூரட்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவிருந்தது. மூன்றாமிடத்துக்கான போட்டிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி வருகை தராததன் காரணமாக இளவாலை சென்லூரட்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.



## முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழக கிரிக்கெட் போட்டி; யாழ். அரசடி சம்பியன்

(வேலணை)



முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழகம் நடத்திய ஆறுபேர் ஐந்து ஓவர் கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டத்தை அரசடி அணி கைப்பற்றியது.

மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட இத்தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் வெற்றிமாதா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இவ்விறுதிப் போட்டியில் கொக்குவில் கிங்ஸ் அணியை எதிர்த்து அரசடி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கிங்ஸ் அணி ஆறு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. சிறப்பாக ஆடி விஜிதரன் 30 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சுபாஸ்கர், கிருபா, சுதன் தலா இரண்டு விக்கெட்டை கைப்பற்றினர். 43 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அரசடி 5.1 ஓவர்களில் ஐந்து விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் திலீபன் 18 ஓட்டங்களைப்பெற்றார். பந்துவீச்சில் கண்ணா, பவிதரன் தலா இரண்டு விக்கெட்டை கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக கிருபாவும் தொடர் ஆட்டநாயகனாக விஜிதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சென்பீற்றேர்ஸ், மனோகரா வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காலிறுதி போட்டியில் சென்பீற்றேர்ஸ் அணியை எதிர்த்து சென்சேவியர் அணி மோதியது.

இதில் போட்டி சமநிலையில் முடிவுற்றதால் பனால்டி உதைமூலம் நடைபெற்ற போட்டியில் 3:1 என்ற கோல்கணக்கில் சென்பீற்றேர்ஸ் அணி வெற்றி பெற்றது.

அடுத்த காலிறுதிப் போட்டியில் மனோகரா அணியை எதிர்த்து ஆதிசக்தி அணி மோதியது. இதில் 5:0 என்ற கோல்கணக்கில் மனோகரா அணி வெற்றிபெற்றது. வெற்றிபெற்ற இரு அணிகளும் அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (3)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளை முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் 6 ஆம் திகதி நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது என்று நெடுந்தீவு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.




## நெடுந்தீவுப் பிரதேச காற்பந்தாட்டம்

(வேலணை)

நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 21 வயதிற்குட்பட்டோருக்கான காற்பந்தாட்டப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி இறுதிப்போட்டிவரை நடைபெறும் என்பதை நெடுந்தீவுப் பிரதேச சபை விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.

## உழவர் ஒன்றியம் சம்பியன்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திவரும் தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளின் முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத் தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் தொடர் இந்தியா வசம்




நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய கிரிக்கெட் அணி முழுமையாக கைப்பற்றியது.

இந்தியா வந்த நியூசிலாந்து அணி 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியது.

இதில் முதல் போட்டியை இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது.

இதையடுத்து இரு அணிகளும் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 365 ஓட்டங்கள் குவித்தது.

இந்திய அணி முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 353 ஓட்டங்கள் குவித்தது.

நியூசிலாந்து அணி தனது 2வது இன்னிங்சின் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 232 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 2-வது இன்னிங்சில் 248 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி தனது 2-வது இன்னிங்சில் 261 ஓட்டங்கள் இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது.

முடிவில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை இழந்து 262 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றது.

போட்டியின் நாயகனாக விராட் ஹோலியும்; தொடர் நாயகனாக அஸ்வினும் தெரிவாகினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கனகமணி நவரத்தினம்



இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி கனகமணி நவரத்தினம் 03.09.2012 திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆனந்தர் நாகம்மாவின் பாசமிகு மகளும், மார்க்கண்டு நாகமணியின் அன்பு மருமகளும், பரமேஸ்வரன்(யாழ்.கல்வி வலயம்), கிருஸ்ணவேணி, பாஸ்கரன், கலைவாணி (வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), பத்மராணி (யா/மயிலணி மகாவித்தியாலயம்-சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வானதி (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி-கந்தரோடை), இரத்தினசபாபதி, மாலினி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம்-நல்லூர்), தெய்வேந்திரராசா, கணேசராசா( யா/அச்செழு சைவப் பிரகாசா வித்தியாலயம்-நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுப்பிரமணியம்(கனடா), காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், சிவசாமி, மனோன்மணி ஆகியோரின் சகோதரியும் கோவேழன், கௌரீசன், ஏரகன், தரசுதா, யனரஞ்சினி, திருவேணி, அபிவர்சனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2012) செவ்வாய்க்கிழமை பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்: மா.நவரத்தினம்
குடும்பத்தினர்

(346)

# அகதிகளைத் ...

களுக்கான சாசனத்தில் இருந்து எங்களை விலகிக் கொள்ள கேட்கிறார்களா? என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க் கட்சிகளின் இந்த திட்டம் மனித உரிமைகளை மீறுவதாக உள்ளது என்று அகதிகளுக்காக செயற்படுபவர்களும் கூறுகிறார்கள்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தை விட தாம் கடுமையாக இருப்பதாக எதிர்க்கட்சி காண்பிக்க விளைகிறது என்று தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான வள மையத்தை சேர்ந்த பமீலாகர் கூறியுள்ளார்.

ஆனால், தமது திட்டம் நியாயமானது என்று கூறுகின்ற பிசப் அவர்கள், ஆட்களை நாடுவிட்டு நாடு கடத்துபவர்களைக் கையாள , இது இலங்கை அரசாங்கத்துக்கு உதவும் என்றும் குறிப்பிடுகிறார்.

நடுக் கடலில் படகில் தவித்த இலங்கையர்கள் 50 பேர் இந்தோனேசியாவால் மீட்கப்பட்டதாக வந்த செய்திகளை அடுத்து ஜூலி பிசப்பின் இந்தக் கருத்து வந்திருக்கிறது. (எ-11)

# இலங்கை...

அமைதியை உறுதி செய்வதும், மேற்கொண்டு எத்தகைய தவறுகள் நடக்காமல் இருக்க உத்தரவாதமளிப்பதும் அமெரிக்காவின் முக்கிய நோக்கம்.

முக்கிய பிரச்சினைகளில் இலங்கை முன்னோக்கி செல்லும் நிலையில், அனைத்துலக சமூகத்தின் ஏனைய கூட்டாளிகளுடன் இணைந்து இலங்கைக்கு ஆதரவளிக்க அமெரிக்கா தயாராகவே உள்ளது.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், புனர்நிர்மாணத்தை ஊக்குவிக்கவும், அரச – தனியார் கூட்டு முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கும் அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ-11)

# தமிழ்நாடு செல்வதை...

இலங்கை மக்கள் மறு அறிவித்தல் வரும் வரை தமிழ்நாட்டுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று இலங்கை அரசு அறிவுறுத்தியிருக்கிறது.

சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு செல்லும் இலங்கையர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக கூறும் இலங்கை வெளிவிவகார அமைச்சு, எனவே இலங்கைப் பிரஜைகள் தங்களது பாதுகாப்பை மனதில் கொண்டு இனி மறு அறிவித்தல் வரும்வரை தமிழ்நாட்டுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறது.

இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்குச் செல்வதில் பிரச்சினையொன்றும் இல்லையென்றும் அது கூறியுள்ளது.

சமீபகாலங்களில் தமிழ்நாட்டுக்கு சென்ற இலங்கைச் சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள், விளையாட்டு மற்றும் கலாசாரத் துறை தொடர்பானவர்கள், தொழில்முறைப் பயிற்சிக்காக வருபவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் இதுபோன்ற அச்சுறுத்தல்களுக்கு ஆளாவதாக அது கூறியிருக்கிறது.

அதேவேளை, இந்த விடயத்தில் இலங்கைப் பயணிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இந்திய அரசாங்கத்தை இலங்கை கேட்டிருக்கிறது.

இதேவேளை, இலங்கையில் இருந்து கால்பந்தாட தமிழகம் சென்ற கொழும்பு றோயல் கல்லூரி அணியை திருப்பி அனுப்புவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

ஆனால் ஓல்ட் றோயலிஸ்ட் சொக்கர் கிளப் என்னும் கழகத்தைச் சேர்ந்த குழுவினரே தமிழகம் சென்றிருந்ததாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

தமிழக அரசின் நடவடிக்கை காரணமாக தாம் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருப்பதாக அந்த அணியினர் தற்போது கூறியிருக்கிறார்கள்.

தமிழகம் சென்ற தமது அணியினரின் முயற்சிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று அந்த அணியின் சார்பில் விளையாடும் வீரரான முகமட் நிசாத் என்பவர் தெரிவித்துள்ளார்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் பணம் செலவழித்து வந்த தமக்கு, தமிழக அரசின் இந்த நடவடிக்கை பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சென்னையில் இருந்து கொழும்பு வந்து சேரும் வரை தாம் பாதுகாப்புக் காரணத்திற்காகவே வெளியேற்றப்படு வதாகக் கூறப்பட்டதாகவும், அதுவரை எவரும் தமக்கு உண்மையான காரணத்தைக் கூறவில்லையென்றும் நிசாத் தெரிவித்துள்ளார். (எ-11)

# அசோக் கே.காந்தா..

வகையில், அசோக் கே.காந்தாவின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலத்துக்கு இந்தியா நீடித்துள்ளது.

அசோக் கே.காந்தாவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக சுமுகமான உறவை விடவும் குறைந்த மட்டத்திலான உறவுகளே காணப்படுகின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, கடைசியாக கொழும்பு வந்த போது, அதிகாரபூர்வமற்ற வகையில், அசோக் கே.காந்தா குறித்து இலங்கை செய்த முறைப்பாடு அவருடனான உறவுகளை சீரழித்து விட்டது.

இலங்கை தொடர்பாக அசோக் கே.காந்த விரும்பத்தகாத அறிக்கைகளை இந்தியாவுக்கு அனுப்பி வருகின்றார் என்று இலங்கை நம்புவதே இந்த முறிவுக்கு காரணமாகும்.

அசோக் கே.காந்தாவுக்கு சேவை நீடிப்பு அளிக்கப்பட்டதால், புதிய தூதுவர் மூலம் உறவுகளைக் கட்டியெழுப்பலாம் என்ற இலங்கையின் எதிர்பார்ப்பு நொருங்கிப் போய்விட்டது.

இது நன்றாகக் கணித்து இலங்கையின் முகத்தில் கொடுக்கப்பட்ட இராஜதந்திர அறை என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது என்று கொழும்பு ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது. (எ-11)

# தேர்தலின்...

கல்வி, உயர்கல்வி, பெற்றோலிய வளம் உள்ளிட்ட அமைச்சுக்கள் தொடர்பில் உன்னிப்பாக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிலரது அமைச்சுப் பதவிகளில் மாற்றம் அல்லது பறிப்பு ஏற்படுத்தப் படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

# முன்னறிவித்தல் எது...

அரியாலை, பூம்புகார், நாவலடிப் பகுதிகளுக்கு விஜயத்தை மேற்கொண்ட அவர் அப்பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடியதோடு உதவிப் பொருட்களையும் வழங்கியிருந்தார்.

மேலும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கிய முன்னாள் ஜனாதிபதி அச்சுவேலிப் பகுதிக்கும் சென்றிருந்தார். சா என்ற அமைப்பின் பணிப்பாளரான சந்திரிகா பண்டாரநாயக்க, மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கான உதவிகள் குறித்து ஆராயவே யாழ் வந்ததாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு கடந்த ஒருவருடத்திற்கு முன்னர் சா அமைப்பினால் சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன. அதனை ஆராய்ந்து பார்ப்பதே அவரின் யாழ். விஜயத்தின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டது.

தான் விஜயம் செய்த இடங்களிலிருந்த மக்களுடன் முன்னாள் ஜனாதிபதி சுதந்திரமாக உரையாடினார். அவர்களின் வீடுகளுக்குச் சென்று தொழில் வாய்ப்பு, அரச உதவிகள், கட்டுமான உதவிகள் என்பன குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சுமார் 27 வருடங்களின் பின் சந்திரிகா குமாரதுங்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## தவறிவிட்டது

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திற்கும் சுதுமலை ரஞ்சிதா பான்சி ஹவுஸிற்கும் இடையில் நீல நிற கைப்பை முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் 0774444180 இற்கு அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும்.
(C-938)

# மேலதிகமாக 4,928...

புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்ட மாணவர்களை வெவ்வேறு வகையினராகக் கருதி புதிய தேசிய சிறப்புத் தகைமை, மாவட்ட சிறப்புத் தகைமையின் தரப்படுத்தல் நிலை பட்டியல்களை வெளியிடும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பிரதம நீதியரசர் நேற்று ஆலோசனை கூறினார்.

இந்த தரப்படுத்தல் பட்டியலை செப்ரெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் தாமதம் ஏதுமின்றி வெளியிடும்படி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பணிக்கும்படி பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அவர் ஆலோசனை கூறினார்.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு சார்பில் தோன்றிய வழக்குரைஞர் பாயிஸ் முஸ்தபா, பல்கலைக்கழக மாணவர் அனுமதி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வகுத்திருப்பதாகக் கூறினார்.

இதன்படி முதலாவது முறையின்படி 3 ஆயிரத்து 675 மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப்படுவர்.

2-வது முறையின்படி 3 ஆயிரத்து 048 மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப் படுவர்.

3-வது முறையின்படி 4 ஆயிரத்து 928 மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப்படுவர்.

நான்காவது முறையின் படி 4 ஆயிரத்து 457 மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப்படுவர்.

இவற்றில் ஆகக் கூடுதலாக மாணவர்களை அனுமதிக்கும் மூன்றாவது முறையை பிரதம நீதியரசர் சிபார்சு செய்தார்.

தற்போது பல்கலைக்கழகங்களுக்கு 21 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இம்முறை ஒவ்வொரு பீடத்திற்கும் 25 சதவீத மாணவர்களை கூடுதலாக அனுமதிக்கலாம் என பிரதம நீதியரசர் கருத்துரைத்தார்.

இந்த வழக்கு செப்ரெம்பர் 12ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் வருகைக்கு...

**கேள்வி:** இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவருவதற்குஎதிர்ப்புக்கிளம்பிஇருக்கிறதே?

**பதில்:** அந்தக் கருத்தில் எங்களுக்கும் உடன்பாடு உள்ளது. அவர் வருகைக்கு நாங்களும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்.

**கேள்வி:** இதற்காக போராட்டம் நடத்துவீர்களா?

**பதில்:** போராட்டம் நடத்தும் முடிவு ஏதும் இல்லை.

**கேள்வி:** முதல்வர் ஜெயலலிதா இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி கொடுப்பது பற்றியும் விளையாட வந்த வீரர்களை திருப்பி அனுப்பியது பற்றியும் உங்கள் கருத்து?

**பதில்:** இதே ஜெயலலிதா சட்ட மன்றத்தில் பிரபாகரனை கைது செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டவர்தானே?

போர் என்றால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்று இலங்கைப் போர் நடந்தபோது சொன்னவர் தானே? அவருக்கு இலங்கைத் தமிழர்களுக்காகப் பேச என்ன தார்மீக உரிமை உள்ளது என்றார். (எ-11)


## Post A/L Special Offer

DIPLOMAS & HIGHER DIPLOMAS

- DiTEC — Diploma in Information Technology
- DiCA — Diploma in Computerized Accounting
- DiBM — Diploma in Business management
- DiSE — Diploma in Software Engineering
- DiWE — Diploma in Web Engineering
- DiE — Diploma in English

HOTLINE 077 309 9 308

Register for Degree & Diplomas

FREE

Laptops

Android S7 Tab

Pendrives

HSDPA Dongle

Shaping Lives.... Creating Future

New batches

05 Sept 2012

08 Sept 2012 @ 9.00 am

ESOFT — The Leader in Professional ICT Education

ESOFT Computer Studies (Pvt) Ltd.
17/1, Brown Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk

(சி-931)



## ஒரே ENGLISH COURSE மூன்று தகைமைகள்

1. Spoken English / Certificate / Dip in English (Speaking, Reading, Listening and writing)
2. Personality Development
3. Leadership Training

Register for

எதிர்கால சவால்களை வெல்லக்கூடிய விதத்தில் ஆங்கிலப் பாடநெறிகள் தயாரிக்கபட்டுள்ளதால் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் தலைமை தாங்கும் இயல்பும் வளர்கின்றது.

இவ் ஆங்கிலப் பாடநெறிமுழுமையான ஆங்கில சூழலில் ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு நிகரான அனுபவமிக்க ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது. மாணவர்கள் ஆங்கிலத்தை பயிலுவது மேலும் இலகுவாகின்றது.

### சர்வதேச ஆங்கிலத் தகைமைகளான

### IELTS, TOEFL, City & Guilds, Etc...

பரீட்சைகளுக்கான தயார்படுத்தல் வகுப்புகள் இப்பிரிவுகளில் பலவருட அனுபவமிக்கவர்களால் நடாத்தப் படுகின்றது.

### VISA SERVICE / STUDY ABROAD

UK, USA, Canada, All European Countries, Australia, New Zealand, Malaysia, etc ... ஆகிய நாடுகளில் உயர்கல்வியை தொடர்வதற்கான கல்லூரி, பல்கலைக்கழக அனுமதி (Spot Admission) மற்றும் இந்நாடுகளுக்கான VISA ஏற்பாடுகளும் ஆவணப்படுத்தல்களும் அனுபவமிக்க சிரேஷ்ட ஆலோசகர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

விமானச்சீட்டு இலவசமாக வழங்கப்படும்.*

### Follow Your Degree in Srilanka

CIVIL ENGINEERING, COMPUTING, ICT– SYSTEM, SOFTWARE DEVELOPMENT, BUSINESS MANAGEMENT, QUANTITY SURVEYING, TELECOMMUNICATION ENGINEERING, LAW, BIOMEDICAL SCIENCE, PSYCHOLOGY

(ஆங்கிலப் பாடநெறியில் கலந்துகொள்ளும் சகலமாணவர்களுக்கும் சிங்களம் மற்றும் அடிப்படை கணனிப் பாட நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும்.)

IiSEEES NALLUR CAMPUS — Your path finder

762, Point Petro Road, Nallur, Jaffna
Tel : 021 2224728, 0777 444 225
email: info@iiseees.lk, website: www.iiseees.lk

(C-937)



## Infotech Computer Education

INFOTECH COMPUTER EDUCATION

கணனிப் பாடநெறிகள் அனைத்திற்கும்

- Microsoft Office
- Desktop Publishing
- Web Designing
- Computer Hardware
- Diploma in Office Automation
- Diploma in Graphic Design
- Diploma in Video Editing
- Dip in Hardware & Networking
- Tally Accounting Technician
- Dip in Computerized Accounting
- Dip in Application Development
- Diploma in Software Engineering

Mega 2012

மெகா புலமைப் பரிசில்

பரீட்சை எதுவுமின்றி நேரடியாக

75% Offer

கட்டணக்கழிவு பெறும் வாய்ப்பு

After A/L Join

ENGINEERING DRAWING & AutoCAD

(க.பொ.த(உ.த) கணிதப்பரீட்சை முடிந்த மாணவர்களுக்கான புதிய விசேட பிரிவுகள் 05.09.2012 புதன்கிழமை மு.ப 9.00 முதல் ஆரம்பம்.)

\# 3, Ramanathan Road,
Kaladdy Junction, Jaffna.
Phone: 021 492 2813

சிங்கள வகுப்புக்களுக்கான (Batch-IV) அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன (சி-938)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

### மாபெரும் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

- A/L பரீட்சை எழுதிவிட்டீர்களா?
- உங்களுடைய எதிர்காலம் எவ்வாறு அமையவேண்டும் என தீர்மானித்து விட்டீர்களா?
- உங்கள் எதிர்கால கற்றல் தொடர்பான திட்டம் என்ன?
- எதைப்படிப்பது? எதைத் தெரிவு செய்வது?
- எப்படிப் படிப்பது? எங்கே படிப்பது?
- அடிப்படை தகைமை என்ன? கட்டணம் என்ன?

கவலையை விடுங்கள்

**Birtish College of High Studies உம் British Council உம் இணைந்து நடாத்தும் இக் கருத்தரங்கில் மேற்படி கேள்விகளுக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் துறைசார் நிபுணர்களினால் வழங்கப்படும்.**

### கருத்தரங்கில் ஆராயப்படும் விடயம்

1. உள்நாட்டில் எவ்வாறான கற்கைநெறிகளை தொடரலாம் University, Open University, Advanced Technical Institue, External - Degree program, Sri Lanka Law College, CIMA, ACCA, AAT, IT, ect,
2. UK, Canada, Australia ஆகிய நாடுகளுக்கான Student Visa ஏனைய. Settilment Visa, Migration Visa, Tourist Visa, Dependant Visa ஏனைய அனைத்து Visaக்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பான ஆலோசனைளும். வழிகாட்டல்களும் துறைசார் சட்டத்தரணிகளால் வழங்கப்படும்.
3. சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆங்கில கற்கை நெறிகளை எவ்வாறு தொடரலாம் என்பது பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படும். (A1, B1, IELTS)

**இடம்:** யாழ். வீரசிங்கம் மண்டபம்
**காலம்:** 08.09.2012 (சனிக்கிழமை)
**நேரம்:** காலை 9.00 மணி

இக்கருத்தரங்கில் அனைவரும் பங்குபற்றி உங்கள் வாழ்க்கையினை வளமுள்ளதாக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

**British College of Higher Studies**

No. 15, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

(சி-932)


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மநாதன் செல்வநாயகி



அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் செல்வநாயகி 03.09.2012 நேற்றுக்காலமானார்.

அன்னார் தில்லைநாதன் பத்மநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தில்லைநாதன் சிரோன்மணி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் பரிமளகாந்தி (கனடா), திருமாறன் (பிரான்ஸ்), மணிமாறன், தமிழ்மாறன், தமிழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீதரன், அனுராதா, டயானி, பாமிலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுஜா, சஜன், துதிகரன், விஷால் ஆகியோரின் பேர்த்தியும், பூபதியம்மா, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.09.2012) 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

(சி-933)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org